






திருச்சி
மாவட்டச்
சிறப்பிதழ்

# தமிழரசு

நவம்பர் 16–30, 1998 ரூ.3











# நமது அன்றாட பழக்கவழக்கங்களால், எய்ட்ஸ் வராது.

# அதற்கு நீங்களே ஒரு உதாரணம்.

காலையில் எழுந்தது முதல் ராத்திரி படுக்கப் போகும் வரை நீங்கள் எத்தனையோ பேரைச் சந்திக்கிறீர்கள். ஓட்டலுக்குச் செல்கிறீர்கள், சினிமா பார்க்கிறீர்கள், நெரிசலான பஸ்ஸில் பயணம் செய்கிறீர்கள், பலருடன் கை குலுக்குகிறீர்கள்.

இவர்களில் யாருக்காவது எச்ஐவி/ எய்ட்ஸ் பாதித்து இருக்கலாம்.

**சாதாரண பழக்கவழக்கங்களின் மூலம் எய்ட்ஸ் பரவுவதாக இருந்தால், உங்களையும் எய்ட்ஸ் பாதித்திருக்க வேண்டும்.**

**ஆனால் அப்படி இல்லையே...**

ஏனெனில், கை குலுக்குவதாலோ, உணவைப் பகிர்ந்து கொள்வதாலோ, தொடுவதாலோ, தும்மலினாலோ, கழிப்பிடத்தை அனைவரும் உபயோகிப்பதாலோ, எய்ட்ஸ் பரவுவதில்லை.

எனவே எய்ட்ஸ் பாதித்தவரைக் கண்டு நீங்கள் ஒதுங்க வேண்டியதில்லை. உங்களுக்கு எந்த ஆபத்தும் இல்லை.

அவர்களும் நம்மைப் போன்றவர்கள்தான். அவர்களுக்கு எப்பொழுதும் போல நாம் அன்பும், ஆதரவும் காட்டுவோம்.

**சிறிதளவு ஆதரவு பெருமளவு சுமையைக் குறைக்கும்.**

குழந்தை பிறப்பைத் தடுப்போம்
எய்ட்ஸ் வந்தோரைக் காப்போம்

தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு — எய்ட்ஸ் — சென்னை-8

மேலும் விவரங்களுக்கு அணுக வேண்டிய முகவரி :
**தமிழ்நாடு எய்ட்ஸ் கட்டுப்பாட்டு அமைப்பு**
417, பாந்தியன் ரோடு, சென்னை - 600 008.
தொ.பே.: 8255467, 8255261, 8254917.
24 மணிநேர தொ.பே.: 8256882, 8256864.

Mudra:TNSACS:6259:98

# இந்த இதழில்...


சமுதாய—மதநல்லிணக்க அமைதிக் குழுக்கள் விரைவில் உருவாக்கப்பட வேண்டும் .......... 2
தேசியப் பத்திரிகை நாள் .......... 7
திருச்சி மாவட்டத்தில் பொது வினியோகம் .......... 10
கால்நடைத்துறையின் கணக்கற்ற பணிகள் .......... 12
கலைஞர் எங்களுக்கு கடவுள் மாதிரிங்க .......... 15
எங்கள் மாவட்டம் .......... 16
தாயை தடுப்பவன் யாரடா? .......... 19
திருச்சி மாவட்ட வளர்ச்சிப் பணிகள் .......... 20
முத்தமிழ்க் காவலர் .......... 24
அறநிலையத்துறையின் பணிகள் .......... 28
பால் உற்பத்தி .......... 32
குழந்தைத் தொழிலாளர் சீரமைப்பு .......... 33
அருங்காட்சியகம் .......... 35
வேளாண் உற்பத்தி .......... 38
மாவட்டத் தொழில் வளர்ச்சி மையம் .......... 41
வ.வே.சு ஐயர் வாழ்விலே .......... 44
தீண்டாமை ஒழிப்பிற்கு தீவிரப் பிரச்சாரம் .......... 46
வாசகர் நெஞ்சம் .......... 48



# தமிழரசு

திருவள்ளுவராண்டு 2029
கார்த்திகை
நவம்பர் 16—30, 1998
மலர் : 30 இதழ் : 10
விலை ரூ.3


## திருக்குறள்

*பிறன்பொருளாள் பெட்டொழுகும் பேதைமை ஞாலத்*
*தறம்பொருள் கண்டார்க ணில்.*

பிறன் மனைவியிடத்து விருப்பம் கொள்ளும் அறியாமை, உலகில் அறநூல்களையும் பொருள் நூல்களையும் ஆராய்ந்து உணர்ந்தவர்களிடம் இல்லை.

— கலைஞர் திருக்குறள் உரையிலிருந்து...

முதல் பக்க அட்டையில் : மாவட்ட ஆட்சியர்கள் மாநாடு
கடைசிப் பக்க அட்டையில் : திருச்சி மலைக்கோட்டை

# சமுதாய - மதநல்லிணக்க அமைதிக் குழுக்கள் விரைவில் உருவாக்கப்பட வேண்டும்

**- மாவட்ட ஆட்சியர்கள் மாநாட்டில் கலைஞர் வலியுறுத்தல்**

**மாவட்ட ஆட்சியர்கள் மாநாடு, முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் 14.11.98 அன்று, அரசு தலைமைச் செயலகத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையில் நடைபெற்றது; அது பற்றிய விவரம் வருமாறு:**

அண்மையில் ஏற்பட்ட பெருமழை காரணமாக மாவட்டங்களில் ஏற்பட்ட சேதங்கள் குறித்தும், அதன் மீது மாவட்ட ஆட்சியர் மேற்கொண்ட நிவாரண நடவடிக்கைகள் குறித்தும் விளக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர்களை முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கேட்டுக் கொண்டார். இதுகுறித்து நாகப்பட்டினம், தஞ்சாவூர், விழுப்புரம், திருவாரூர், கடலூர், காஞ்சிபுரம், திருவள்ளூர், வேலூர், திருவண்ணாமலை, பெரம்பலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் விவரங்களை எடுத்துக் கூறினர்.

தஞ்சாவூர், திருவாரூர், நாகை, கடலூர் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கடந்த இரண்டாண்டு காலத்தில் - அந்த மாவட்டங்களில் மேற் கொள்ளப்பட்ட தூர்வாரும் பணி காரணமாக இந்தப் பெருமழையிலே அந்த மூன்று மாவட்டங்களும் பெரிய அளவிலே பாதிக்கப்படவில்லை என்று கூறினார்கள்.

இந்தப் பொருள் குறித்து முதலமைச்சர் இறுதியாக விளக்கும்போது மழை நேரங்களில் மட்டும் நிவாரணப் பணிகளை மேற்கொள்வதென்று இல்லாமல், மழை இல்லாத கோடை காலத்தில் மாவட்டங்களில் உள்ள குளங்கள், ஏரிகள் போன்றவற்றை நன்றாக ஆழப்படுத்தும் பணியை மேற்கொண்டால், மழைக்காலத்தில் அதிகத் தண்ணீரைச் சேகரித்து வைத்துக் கொள்ளலாம் என்றும், அதனால் மழைச் சேதங்கள் குறையும்





என்றும், சேகரித்து வைத்துக் கொள்ளும் தண்ணீரை, பிறகு தேவைப்படும் நேரங்களில் பயன்படுத்திக் கொள்ளவும் உதவும் என்றும் கூறினார்.

மேலும் நவம்பர் இறுதியிலோ அல்லது டிசம்பர் முதல் வாரத்திலோ மீண்டும் பருவமழை தொடரக்கூடிய வாய்ப்பு இருப்பதால், பெய்த பெருமழை காரணமாகப் பாதிக்கப்பட்ட சாலைகள் செப்பனிடும் பணியைத் தற்காலிகமாகத் தற்போது மேற்கொள்ளலாம் என்றும், நிரந்தரமாகச் செய்யப்பட வேண்டிய பணிகளை ஜனவரி திங்களுக்குப் பிறகு மேற்கொள்ளலாம் என்றும் கருத்துத் தெரிவித்தார்.

**மத நல்லிணக்க அமைதிக் குழுக்கள்**

அடுத்து, சட்டம் ஒழுங்கு பற்றி விரிவாக விவாதிக்கப்பட்டது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தப் பொருள் மீது கருத்துக்களைக் கூறும்போது, அண்மையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவான சமுதாய மத நல்லிணக்க அமைதிக் குழுக்களை ஒவ்வொரு கிராமத்திலும் அமைப்பது பற்றியும், தீண்டாமை ஒழிப்பு, மதுவிலக்கு அமலாக்கம் ஆகியவை குறித்தும் தங்கள் கருத்துக்களைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

மேலும் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் தங்கள் தங்கள் மாவட்டங்களில் எத்தனைக் கிராமங்களில் இன்னமும் டீக்கடைகளில் இரண்டு குவளைகளைப் பயன்படுத்தும் வழக்கம் இருக்கின்றது என்பதைத் தெரிவிக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டதற்கிணங்க, ஒரு சில மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்கள் மாவட்டத்தில் மூன்று நான்கு கிராமங்களில் அந்தப் பழக்கம் தொடர்ந்து இருந்து வந்ததாகவும் அதன்மீது தாங்கள் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும் தெரிவித்தனர்.

இது குறித்து முதலமைச்சர் கலைஞர் ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவரும் அடுத்த ஒரு வார காலத்திற்குள் அவரவர் மாவட்டங்களில் எத்தனை ஊர்களில் இன்னமும் அந்த இரண்டு குவளைப் பழக்கம் உள்ளது என்பதையும், அதன்மீது அவர்கள் எடுத்த நடவடிக்கைகளையும் பட்டியலிட்டு அரசாங்கத்திற்கு அனுப்பிவைக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

சட்டம், ஒழுங்கு பிரச்சினை குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்த கருத்துக்களின் அடிப்படையில், முதலமைச்சர் **கலைஞர்**, சாதீய அமைப்புகள் மட்டுமின்றி அரசியல் கட்சிகள் சார்பில் நடத்தப்படும் ஊர்வலங்களுக்கோ, மாநாடுகளுக்கோ, கூட்டங்களுக்கோ லாரிகளில் ஆட்களை அழைத்துச் செல்ல இனிமேல் கண்டிப்பாக அனுமதிக்கக் கூடாதென்றும், லாரிகளில் மக்களை அழைத்துச் செல்வதைத் தடை செய்ய வேண்டுமென்றும், இதனை மீறி யாராவது லாரிகளில் மக்களை அழைத்துச் செல்வார்களேயானால், அந்த லாரிகளைப் பறிமுதல் செய்து, உரிமங்களை ரத்து செய்ய வேண்டுமென்றும் திட்டவட்டமாகத் தெரிவித்தார்.

சில கோயில்களில் நடைபெறும் திருவிழாக்கள் காரணமாகச் சாதிக் கலவரம் ஏற்படுகிறது என்று மாவட்ட ஆட்சியர் கருத்துக் கூறியதன் பேரில் கோவில் திருவிழா காரணமாகச் சாதிக் கலவரம் ஏற்படலாம் என்று முன்கூட்டியே தெரிகின்ற நேரத்தில் அந்தந்தக் கோவில்களின் அதிகாரிகள் முன்கூட்டியே மாவட்ட ஆட்சித் தலைவரையும் காவல்துறை அதிகாரிகளையும் தொடர்பு கொண்டு கலந்து பேசி, தக்க பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று முடிவெடுக்கப்பட்டது.

**வறுமைக் கோட்டுக்குக் கீழ் உள்ள சமூகத்தினருக்கெல்லாம் இலவச வீட்டுமனை**

ஆதிதிராவிடர், பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் முன்னேறிய சமூகத்தினர் ஆகியோரில் வறுமைக் கோட்டுக்குக் கீழ் வாழும் குடும்பத்தினருக்கு இலவச வீட்டுமனை வழங்கிட நில

எடுப்புச் செய்யத் தனித்தனியே நிதி ஒதுக்கீடு மாவட்ட ஆட்சியர்களுக்கு வழங்கப்படுகின்றது. மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இவைகளுக்காக நிலம் தேர்வு செய்யும்போது, அனைத்துச் சமூகத்தினரையும் ஒருங்கிணைத்து ஒரே பகுதியில் வாழத்தக்க வகையிலே வீட்டுமனை வழங்குவதற்கு முயற்சிக்க வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

அரசு உதவி பெற்று நடத்தப்படும் கல்வி நிலையங்கள் (Aided Institutions) சிலவற்றில் சாதி சமய வேறுபாட்டு உணர்வுகள் பரவுவதற்கு அந்தக் கல்வி நிலையங்களை நடத்துபவர்களே காரணமாக இருக்கிறார்கள் என்று மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூறியதன் பேரில், அப்படிப்பட்ட போக்கை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முறையாகக் கண்காணித்து, தவறான வழிகளில் நடைபெறும் கல்வி நிலையங்களைப் பற்றி அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

மாநில விளையாட்டு ஆணையத்தின் உதவியுடன் எல்லா மாவட்டங்களிலும், ஊரகப் பகுதிகளிலும் ஆண்டுதோறும் இளைஞர் விழாக்களும், இளைஞர் முகாம்களும் (Youth Festivals and Youth Camps) நடத்துவதன் மூலம் இளைஞர்களிடையே சாதி சமய வேறுபாடுகளைப் போக்கி நல்லிணக்கம் வளர உதவிடும் வகையில் முயற்சிகள் மேற்கொள்ளப்பட அறிவுறுத்தப்பட்டது.



## இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பு

சாதிக் கலவரம் ஏற்படாமல் இருக்கவும், கள்ளச் சாராயத் தொழிலை ஒழிக்கவும், முக்கியமாக மக்களுக்கு வேலைவாய்ப்பினை அளிக்க வேண்டுமென்ற எண்ணத்துடன் பாசன வசதிகளை ஆங்காங்கே மேம்படுத்தி மக்களை வேளாண்மைத் தொழிலிலே ஊக்குவிக்க வேண்டுமென்றும், புதிய தொழிற்சாலைகளை ஏற்படுத்தி படித்த இளைஞர்களுக்கு வேலைவாய்ப்புகளைக் கொடுப்பதற்கு வழிவகை காண வேண்டுமென்றும் முடிவெடுக்கப்பட்டது.

மதுவிலக்குப் பிரச்சினை குறித்தும், கள்ளச் சாராயத்தை ஒழிப்பது குறித்தும் தீவிர நடவடிக்கை எடுத்திட மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு உள்துறைச் செயலாளர் அதுகுறித்து தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தப்பட்டது.

சட்டம் ஒழுங்குப் பிரச்சினையைச் சமாளிக்கவும், கள்ளச் சாராயத்தை ஒழிக்கவும் மாவட்ட ஆட்சித் தலைவர்களும் மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்களும் நன்கு ஒருங்கிணைந்து பணியாற்ற வேண்டுமென்று முதலமைச்சர் கேட்டுக்கொண்டார். மாவட்ட ஆட்சித் தலைவரின் கட்டுப்பாட்டின் கீழ் அந்தந்த மாவட்டத்திலுள்ள அனைத்துத் துறையினரும் இணைந்து பணியாற்றுவதன் மூலம்தான் அரசுப் பணிகளைத் திறம்பட ஆற்றிட முடியுமென்றும் முதலமைச்சர் கூறினார்.

# நமக்கு நாமே திட்டப் பணிகள்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் 14 ஊராட்சி ஒன்றியங்களிலும் மொத்தம் 52 பணிகள் நல்லமுறையிலே நடைபெற்று வருகின்றன.

குளங்கள் தூர் வாருதல், சாலைகள் அமைத்தல், நூலகக் கட்டடம் அமைத்தல், கழிவுநீர் வடிகால் அமைத்தல், சேதமடைந்த பள்ளிக் கட்டடம் சத்துணவுக் கூடம் சீரமைத்தல், பஞ்சாயத்துக் கட்டடம் சீர்செய்தல், தொலைக்காட்சி அறை சீரமைத்தல் போன்ற பணிகள் நடைபெற்று வருகின்றன.

இம் மாவட்டத்தில் தொட்டியம் ஊராட்சி ஒன்றியத்தில் மட்டும் 16 பணிகள் நடைபெற்று வருவதும், அந்தநல்லூர் ஒன்றியத்தில் பச்சடி வாய்க்கால் தூர்வாரும் பணிக்கான மொத்தத் தொகை ரூ.30,000னையும், மருங்காபுரி ஊராட்சி ஒன்றியத்தில் கருமலை கிராமத்தில் நூலகம் அமைக்கும் முழுச் செலவான ரூ.30,000னையும் துறையூர் ஊராட்சி ஒன்றியத்தில் வீராபுரம் புதுப்பாலம் முதல் சுடுமாரி ஆறுவரை தூர்வாரும் பணிக்கான முழு செலவினம் ரூபாய் 30,000னையும் அரசு நிதி ஒதுக்கீடு ஏதுமின்றிப் பொது மக்களே திட்டப் பணிக்கான செலவினங்களை ஏற்றுள்ளதும் தனிச் சிறப்பாகும்.



இம்மாவட்டத்தில் இத்திட்டங்களின் மூலம் நடைபெறும் 52 பணிகளின் மொத்த மதிப்பீடு ரூ.37,55,000 ஆகும்.

இதில் பொதுமக்களின் பங்களிப்பு ரூ.12,27,250 ஆகும். அரசின் பங்கு ரூ.25,27,750 ஆகும். ●

அடுத்து, மினி-பஸ் திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. தமிழகத்தில் ஏழு மாவட்டங்களில் மட்டும் இத்திட்டத்திற்கு எதிராகச் சிலர் நீதிமன்றம் சென்று தடையாணை பெற்றிருக்கிறார்கள் என்று கூறப்பட்டது. அந்தத் தடையாணைகளிலிருந்து விலக்குப் பெற விரைவில் முயற்சிக்கப்பட வேண்டுமென்றும் இந்தத் திட்டத்தின் மூலம் கிராமப்புற மக்கள் பெரிதும் பயன் அடைவார்கள் என்பதால் விரைவில் மாநிலம் முழுவதும் பெரிய அளவிலே மினி-பஸ் திட்டத்தை விரிவுபடுத்த வேண்டுமென்றும் முதலமைச்சர் **கலைஞர்** கூறினார்.

அடுத்து, சமத்துவபுரம், அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், நமக்கு நாமே திட்டம் போன்ற முக்கியத் திட்டங்கள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துக்களைத் தெரிவித்தனர். ஒவ்வொரு மாவட்டத்திலும் இத்திட்டங்களின் பணி முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சியர்களால் விளக்கம் தரப்பட்டது.

## ஒரே வடிவமைப்பில் வீடுகள்

முதல் சமத்துவபுரங்கள் அநேகமாக எல்லா மாவட்டங்களிலும் முடிவடையும் தருவாயில் உள்ளதாகவும், இரண்டாவது சமத்துவபுரங்கள் 1999ஆம் ஆண்டு ஜனவரிக்குள் முடிவடைந்துவிடும் என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்தனர்.

எல்லா மாவட்டங்களிலும் சமத்துவபுரங்கள் ஒரே வடிவமைப்பில் அமைக்கப்படலாமென்றும், சமத்துவபுரங்கள் ஊரையொட்டி அமைக்கப்பட வேண்டுமென்றும் முதல்வர் **கலைஞர்** வலியுறுத்தினார்.

''சாதிகள் இல்லையடி பாப்பா - குலத் தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம்!'' - **பாரதியார்**

## அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்

1997-98ஆம் ஆண்டில் ரூ.216.28 கோடி நிதி ஒதுக்கீட்டில் 30,227 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டு, அதில் 27,661 பணிகள் முடிக்கப்பட்டுள்ளது. 4,566 பணிகள் இன்னும் நிலுவையில் உள்ளன.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் டிசம்பர் 1998க்குள் இப்பணிகளை முடிக்க வேண்டும். 1998-99ல் 12 இலட்சம் மக்கள் பயன்பெறும் வகையில் ரூ.239.13 கோடி நிதி ஒதுக்கீட்டில் 27,419 பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. குடிநீர், சாலைகள், தெரு விளக்குகள், பள்ளிக் கட்டடங்கள், பொது விநியோகத் திட்டம், பொதுச் சுகாதாரம் போன்ற அடிப்படை வசதிகளுடன், அனைத்துப் பணிகளையும் மார்ச் 1999க்குள் முடித்து இந்த 212 கிராமங்களும் முழுமை பெற்ற கிராமமாக உருவாக்க வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் அண்ணா மறுமலர்ச்சித் திட்டமல்லாத மற்ற கிராமங்களிலும் சமூக மற்றும் மனிதவள மேம்பாட்டுக்கான பணிகளிலும் கவனம் செலுத்த வேண்டும். சுகாதார முகாம்கள், அனைவருக்கும் எழுத்தறிவு, சுய உதவிக் குழுக்கள், மகளிர் குழுக்கள், விவசாயிகள் விவாதக் குழு போன்றவற்றிற்கான கால அட்டவணை தீட்டிச் செயல்படுத்த வேண்டும்.

> "மக்களிக்கிடையே பிறப்பாலோ, சாதி-சமய வேறுபாட்டாலோ, பொருளாதார நிலையினாலோ, எந்தவகையான ஏற்றத்தாழ்வும் இருக்கக்கூடாது. எல்லா மக்களும் 'ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள்' போல, இணைந்து சமநிலையில் வாழவேண்டும்!".
>
> – அண்ணல் காந்தியடிகள்

## நமக்கு நாமே திட்டம் பொதுமக்கள் வரவேற்பு

நமக்கு நாமே திட்டம் அனைத்து மாவட்டங்களிலும் பொதுமக்களிடம் மிகுந்த வரவேற்பைப் பெற்றுள்ளது. மக்களின் ஈடுபாடும் பங்களிப்பும் அதிக அளவில் உள்ளதாகவும், இத்திட்டத்தை மேலும் சிறப்பாக நிறைவேற்றக் கூடுதல் நிதி வேண்டுமெனவும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தெரிவித்துள்ளனர். எனவே, இத்திட்டத்தை மேலும் சிறப்பாகச் செயல்படுத்தும் பொருட்டு, ஏற்கெனவே அனுமதிக்கப்பட்ட ரூ.10 கோடியுடன் மேலும் கூடுதலாக ரூ.4 கோடி அனுமதிக்கப்படும்.

மக்கள் நலப் பணியாளர்களின் பணிகள் குறித்தும் விரிவாக விவாதிக்கப்பட்டது. 12,593 ஊராட்சிகளில், பணிபுரியும் 13,491 மக்கள் நலப் பணியாளர்களுக்கு அரசின் வளர்ச்சித் திட்டப் பணிகளில் அதன் நோக்கத்தை, குறிப்பாக முதியோர் கல்வி, சிறுசேமிப்பு, மதுவிலக்கு மற்றும் ஊரக வளர்ச்சித் திட்டங்கள் பொது மக்களைச் சென்றடையும் வகையில் முழுமையாக ஈடுபடுத்தப்பட வேண்டும். தற்போது காலியாகவுள்ள மக்கள் நலப் பணியாளர் இடங்களை நிரப்புவதற்கான வழிமுறைகளைப் பற்றி அரசு தனியாக ஆராய்ந்து முடிவு செய்யும்.

## 98 சதவிகித குடும்ப அட்டைகள்

அடுத்து, பொது விநியோகத் திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டது. பொது விநியோகத் திட்டத்தில் புதிய குடும்ப அட்டைகள் 98 சதவிகிதம் பேர்களுக்கு வழங்கப்பட்டுவிட்டன என்றும், மீதி 2 சதவிகிதம் பேர்களுக்கு புகைப்படம், முகவரி போன்றவைகளில் ஐயங்கள் இருப்பதால் வழங்கப்படவில்லை; அவைகளும் மாவட்ட ஆட்சியர்கள் மூலம் பரிசீலிக்கப்பட்டு விரைவில் அனைவருக்கும் குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு முடிக்கப்படும் என்றும் கூறப்பட்டது.

அடுத்து, இலவச வேட்டி சேலைகள் வழங்கும் திட்டம் குறித்து விவாதிக்கப்பட்டது.

கடந்த ஆண்டு வழங்கப்பட்ட அனைவருக்கும் இலவச வேட்டி சேலைகள் வழங்கப்பட் வேண்டும். அதில் யாரும் விடுபட்டுவிடக் கூடாது. இந்த எண்ணிக்கை குறையக்கூடிய அளவிற்குப் புதிதாக எந்த நிபந்தனையும் விதிக்கக்கூடாது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கருத்துத் தெரிவித்தார்கள். இலவச வேட்டி சேலைகளை ஒவ்வொரு கிராமத்திலும் தக்க கண்காணிப்புடன் ஒழுங்காக விநியோகிக்கப்பட வேண்டுமென்றும் முடிவு எடுக்கப்பட்டது.

## திருமண உதவித்தொகை

மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் திருமண உதவித் திட்டம் பற்றி விவாதிக்கப்பட்டு, இத்திட்டத்தின்கீழ் நிலுவையில் உள்ள மனுக்கள் எல்லாம் விரைந்து பரிசீலிக்கப்பட்டு உதவித் தொகை உடனடியாக வழங்கப்பட வேண்டும் என்று சமூக நலத்துறைக்கும் மாவட்ட நிர்வாகத்துக்கும் முதல்வர் கலைஞர் அவர்கள் இந்த மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மாநாட்டின்போது (14.11.98) உத்தரவிட்டார். ☐

# தேசியப் பத்திரிகை நாள்

"இந்த ஆட்சியில் எந்தப் பத்திரிகையாளரையும் கூண்டில் நிறுத்தவில்லை, எவர் மீதும் தாக்குதல் நடத்தவில்லை, 'பத்திரிகையாளர் மீது விழும் அடி, என் மீது விழும் அடியாகும்' என்று கூறியவர் கலைஞர்.

எந்தப் பத்திரிகையாளரையும் சந்திக்கக் கலைஞர் மறுத்ததில்லை. நான்காம் முறையாக முதலமைச்சராகக் கலைஞர் பதவி ஏற்றது முதல் 96–ஆம் ஆண்டில் 26 முறை செய்தியாளர்களைச் சந்தித்து உரையாடியுள்ளார். அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளின் எண்ணிக்கை 495.

1997–98ஆம் ஆண்டில் 72 முறை பத்திரிகையாளர்களைச் சந்தித்துள்ளார். 1,237 கேள்விகளுக்கு விடை அளித்தார். இந்த ஆண்டில் இதுவரை 60 முறை சந்தித்து இருக்கிறார். 906 கேள்விகளுக்குப் பதிலளித்து இருக்கிறார்.



இதுவரை அவர் 158 முறை பத்திரிகையாளர்களைச் சந்தித்து 2 ஆயிரத்து 638 கேள்விகளுக்கு விடையளித்துள்ளார்.

தீண்டாமையை ஒழிப்பதற்காகப் பல்வேறு விளம்பரப் பணிகளை மேற்கொள்ளும் வகையில், ஒரு கோடி ரூபாய் முதல்வர் கலைஞர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. தீண்டாமையை ஒழிக்க, சாதி பேதம் நீங்க, மத நல்லிணக்கம் ஏற்படுத்தப் பாடுபடுபவர்களைப் பாராட்டிச் சிறப்பிக்க முதலமைச்சர் ஆணை பிறப்பித்துள்ளார். அந்தப் பணியில் ஈடுபடும் பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்களை பாராட்டி விருது வழங்கவும் ஆணையிட்டுள்ளார்.

அண்மையில், முதல்வர் கலைஞர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் – பத்திரிகைகளும், மக்கள் தொடர்புச் சாதனங்களும் – சாதிப் பிணக்குகள், மதக்கலவரங்கள் போன்ற செய்திகளை மிகைப்படுத்தி வெளியிடுவதைத் தவிர்த்திடுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் தீண்டாமையை ஒழிக்க, சாதி அகற்ற, மதநல்லிணக்கம் ஏற்படுத்த, நாம் எல்லோரும் ஒன்றுபடுவோம், அந்த முயற்சியில் நீங்கள் அரசுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்".

*– மாண்புமிகு செய்தி–விளம்பரத்துறை அமைச்சர் திரு.வ. முல்லைவேந்தன் அவர்கள் சென்னை இராஜாஜி மண்டபத்தில் 16–11–98 அன்று நடந்த தேசியப் பத்திரிகை நாள் விழாவில் ஆற்றிய உரையிலிருந்து.*

# இதுதான் திருச்சிராப்பள்ளி மாவட்டம்!

*தலைநகர்* : திருச்சிராப்பள்ளி
*மாநகராட்சி* : திருச்சிராப்பள்ளி
*நகராட்சி* : 1. மணப்பாறை
2. துறையூர்

### வருவாய் நிர்வாகம்

*கோட்டங்கள் :*

1. திருச்சிராப்பள்ளி
2. லால்குடி
3. முசிறி

*வட்டங்கள் :*

1. திருச்சிராப்பள்ளி
2. மணப்பாறை
3. முசிறி
4. லால்குடி
5. துறையூர்
6. ஸ்ரீரங்கம்
7. மண்ணச்சநல்லூர்
8. தொட்டியம்

(திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலிருந்து கரூர் பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களைப் பிரித்தபோது திருச்சிராப்பள்ளி, மணப்பாறை, முசிறி, லால்குடி, துறையூர், ஸ்ரீரங்கம் ஆகிய வருவாய் வட்டங்கள் மட்டுமிருந்தன. பின்னர் மண்ணச்சநல்லூர், தொட்டியம் ஆகிய இரு வருவாய் வட்டங்கள் புதிதாக உருவாக்கப்பட்டு தற்போது மொத்தம் எட்டு வருவாய் வட்டங்கள் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ளன.)

### நகரப் பேரூராட்சிகள் : 19

1. லால்குடி
2. முசிறி
3. மண்ணச்சநல்லூர்
4. கல்லக்குடி
5. சிறுகமணி
6. காட்டுபுத்தூர்
7. பூவாளூர்
8. துவாக்குடி
9. புள்ளம்பாடி
10. உப்பிலியாபுரம்
11. தாத்தையங்கார்பேட்டை
12. கரியமாணிக்கம்
13. திருவெறும்பூர்
14. கூத்தப்பார்
15. எஸ். கண்ணனூர்
16. தொட்டியம்
17. பாலகிருஷ்ணம்பட்டி
18. மேட்டுப்பாளையம்
19. பொன்னம்பட்டி

### ஊராட்சி ஒன்றியம் 14, கிராம ஊராட்சிகள் 407

### வரலாறு

நில அடிப்படையில் தமிழகத்தின் மையமாக விளங்கும் திருச்சிராப்பள்ளி மாவட்டம் 1995, செப்டம்பர் 30ஆம் நாளன்று மூன்றாகப் பிரிக்கப்பட்டது. (திருச்சிராப்பள்ளி, கரூர் மற்றும் பெரம்பலூர்).

### அமைவிடம்

கிழக்கில் தஞ்சாவூர், மேற்கில் கரூர், வடக்கில் பெரம்பலூர், தெற்கில் புதுக்கோட்டை, திண்டுக்கல் மாவட்டங்களை எல்லைகளாகக் கொண்டுள்ளது.

### சட்டமன்றத் தொகுதிகள்

1. திருச்சி
2. திருவெறும்பூர்
3. திருவரங்கம்
4. லால்குடி
5. தொட்டியம்
6. முசிறி
7. உப்பிலியாபுரம்
8. மருங்காபுரி (கரூர் மாவட்ட குளித்தலையில் ஒரு பகுதியும் இதில் வரும்.)

### நாடாளுமன்றத் தொகுதிகள்

1. திருச்சிராப்பள்ளி (கரூர், பெரம்பலூர் மாவட்டப் பகுதிகளும் இதில் வரும்.)

திருச்சியில் ஆடிப்பெருக்கு விழா பொங்கிப் பெருகும் காவிரியாறு - தொலைவில் தலைநிமிர்ந்து நிற்கும் மலைக்கோட்டை!





"பிறவியால் சாதிமுறை காண்பதை அடியோடு போக்கவேண்டும்!" – தந்தை பெரியார்

## திருச்சிராப்பள்ளியில்...



புனித லூர்து அன்னை பேராலயம்



திருவரங்கம் ராஜகோபுரம்



நத்ஹூர்வலி தர்கா

# பொது விநியோகம்

மாண்புமிகு உணவு - கூட்டுறவுத்துறை அமைச்சர்
திரு. கே.என்.நேரு



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பொது விநியோகத் திட்டப்பணிகள் போற்றத்தக்க வகையில் செயல்பட்டு வருகின்றன. கூட்டுறவுத் துறையின் கீழ் இங்கே 771 முழுநேர அங்காடிகள் இயங்கிவருகின்றன. தற்போது ஆவாரங்காடு கிராமத்தில் 772வது முழுநேர அங்காடி திறந்து வைக்கப்பட்டிருக்கிறது. இந்த அங்காடி 521 குடும்ப அட்டைகளுடன் செயல்படும்.

இவைகளைத் தவிர 96 பகுதிநேர அங்காடிகளும் இம் மாவட்டத்தில் இயங்கி வருகின்றன.

பொதுமக்கள் தங்கள் அத்தியாவசியப் பொருட்களைப் பெறுவதற்கு அதிக தூரம் நடக்கக் கூடாது என்ற நல்ல எண்ணத்தில், புதிய மற்றும் பகுதிநேர அங்காடிகளுக்கான விதிமுறைகள் மிகவும் எளிதாக்கப்பட்டுள்ளன.

1.4.1997க்குப் பின், திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மட்டும் 35 புதிய முழுநேர அங்காடிகளும் 57 பகுதிநேர அங்காடிகளும் துவக்கிவைக்கப்பட்டுள்ளன.

நியாயவிலைக் கடைகள் மூலம் பொதுமக்களுக்கு அத்தியாவசியப் பொருட்களான அரிசி, சர்க்கரை, கோதுமை, ரவா, மைதா போன்ற



# சா...தீ!

"சாதி என்கிற நோயை முளையிலேயே கிள்ளி எறியவேண்டும்!"

- பெருந்தலைவர் காமராசர்

"விவேகம் என்னும் வெள்ளி முளைத்து, சாதிப்பித்து என்னும் சனி தொலைந்தால்தான், சமத்துவம் எனும் சூரியன் தோன்றும்!"

- கலைஞர்

'தோழமைதான் சமத்துவத்தின் கனி; சமதர்ம மணம்; இதைக் காணவேண்டுமானால், சாதி தொலையவேண்டும்!"

- அறிஞர் அண்ணா

"சாதியைப் புலமாய்க் கொண்டு தலைவர்கள் அமைந்தால் அங்கே நீதியே அமைந்திடாது!"

- கவியரசர் கண்ணதாசன்

"சாதி என்ற சொல்லே பழந்தமிழ் இலக்கியங்களில் இல்லை; இப்போது அதற்காக மோதிக்கொள்கிறார்களே – இது என்ன நீதி?"

- கி.ஆ.பெ.விசுவநாதம்

---

*பொருட்கள் விநியோகம் செய்யப்படுகின்றன. 1.10.1998ல் கூட்டுறவுத்துறை அங்காடிகள் மூலம் சுமார் 5,74,206 குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொருட்கள் வழங்கப்படுகின்றன.*

*திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் நவம்பர் '98 முதல் கூட்டுறவு அங்காடிகள் மூலம் அயோடின் உப்பு விநியோகிக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.*

*1997-98ஆம் ஆண்டில் கூட்டுறவு நியாயவிலைக் கடைகள் மூலம் 92,256 மெட்ரிக் டன் அரிசி, 1,109 மெ.டன். சர்க்கரை, 3,504 மெ. டன் கோதுமை, 26,860 கி.லி. மண்ணெண்ணெய் ஆகியவை பொதுமக்களுக்குத் தட்டுப்பாடின்றி விநியோகிக்கப்பட்டுள்ளன.*

*பொதுவிநியோகத் திட்டத்தினைச் செயல்படுத்துவதால், நட்டத்தில் இயங்கும் அங்காடிகளுக்கு அந்த நட்டத்தினை ஈடுகட்ட அரசு மானியம் வழ்ங்கி வருகிறது.*

*1996-97ஆம் ஆண்டில் 385 அங்காடிகளுக்கு ரூ.24.98 இலட்சம் மானியமாக வழங்கப்பட்டுள்ளது.*

*ஜவகர் வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் 21 அங்காடிகளுக்குச் சொந்தக் கட்டடங்கள் கட்டப்பட்டு, அக்கட்டடங்களில் அங்காடிகள் தற்போது சிறப்புற இயங்கி வருகின்றன.*

*திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் 5 மண்ணெண்ணெய் பங்குகள் இதுவரை திறக்கப்பட்டுள்ளன. ஒரு மண்ணெண்ணெய் பங்க் அமைக்க ரூ.4.50 இலட்சம் வரை செலவாகிறது. இதில் பாதி (2.25 இலட்சம்) தொகையை அரசு மானியமாக அளிக்கிறது.*

*திருச்சி மாவட்டத்தில் உள்ள லால்குடி, துறையூர் ஆகிய இடங்களில் விரைவில் மேலும் இரண்டு மண்ணெண்ணெய் பங்க் திறக்கப்பட உள்ளது. இவைகளைத் தவிர கீழ்க்கண்ட இடங்களிலும் மண்ணெண்ணெய் பங்க் திறக்கத்தக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.*

- *திருச்சி அண்ணாநகர்,*
- *பொன்மலை ரயில்வே காலனி,*
- *திருவானைக்காவல்*
- *செம்பட்டு,*
- *சீரங்கம்,*
- *கே.கே. நகர்,*
- *பொன்னகர்,*
- *சங்கிலியாண்டபுரம்,*
- *காஜாமலை,*
- *செங்குளம் காலனி,*
- *எடத்தெரு,*
- *வரகனேரி,*
- *காஜா பேட்டை,*
- *உறையூர்,*
- *அரியமங்கலம்,*
- *சிந்தாமணி,*
- *புத்தூர்,*
- *மதுரை சாலை,*
- *அமராவதி,*
- *குட்ஷெட் சாலை,*
- *மணப்பாறை,*
- *முசிறி*

*- பொதுவிநியோகத் திட்டம் புது விநியோகத் திட்டம் இல்லையெனினும் - கலைஞர் அரசில்தான் இத்திட்டம் ஏற்றமுற நடைபெற்று வருவதாக மக்கள் வாழ்த்தி மகிழ்கின்றனர்.* ★



# கால்நடைத் துறையின் கணக்கற்ற பணிகள்

மாண்புமிகு கால்நடைப் பராமரிப்புத்துறை அமைச்சர்
திரு. புலவர் செங்குட்டுவன்

'பாலைப் பொழிந்துதரும்
பசுதான் – அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா'

– என்று பாடுவார் பாரதியார். கால்நடைச் செல்வமானது, செல்வத்துட் செல்வம் என்பதை இளம் பிராயத்திலிருந்தே ஒவ்வொருவரும் உணர வேண்டும் என எண்ணிய அவர், தமது 'பாப்பா பாட்டில்' அதோடு விட்டாரில்லை.

'வண்டி இழுக்கும் நல்ல குதிரை
– நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு
– இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா!...'

–என்றெல்லாம் கூட பாடிக் கொண்டே போகிறார்.

நம்முடைய தலைவர் மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள்கூட. அண்மையிலே கால்நடை மருத்துவப் பல்கலைக்கழகத்திலே அண்மையில் நடைபெற்ற விழா ஒன்றில் பேசியதை யாரும் மறக்க முடியாது. அறிவாலயத்தில் வளரும் இரண்டு நாய்களிடத்திலே தாம் காட்டும் அன்பையும் அவ்விரண்டும் தம்மிடம் காட்டுகின்ற நன்றிவுணர்வையும் அவர் காட்டிய பாங்கே அலாதியாக இருந்தது.

இத்தனைச் சிறப்புமிக்க இந்தக் கால்நடைச் செல்வங்களின் பாதுகாப்பிற்காக அரசு எடுத்து வரும் கவனிப்புகள் குறிப்பிடத்தக்கவைகளாகும்.

**தமிழக அளவில்**

கால்நடைப் பராமரிப்புத் துறைப்பணிகளைத் தமிழ்நாடு முழுமைக்கும் என்று பார்ப்போமானால், இதுவரை 50 கால்நடை மருந்தகங்கள் மருத்துவமனைகளாகத் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்றன.

மேலும், புதிய கால்நடை மருந்தகங்கள் 40 தொடங்கப்பட்டுள்ளன.

ரூ.18.45 இலட்சத்தில் கரூர், திருவாரூர், உதகை ஆகிய இடங்களில் உள்ள கால்நடை மருத்துவமனைகள் தரம் உயர்த்தப்பட்டு, பிரதம மருத்துவமனைகளாகச் செயல்பட்டு வருகின்றன.

1998–99ல் 1,567 பார்வைக் கிளை நிலையங்கள் தொடங்கப்பட்டன; 759 தினக்கூலிப் பணியாளர்கள் நிரந்தரப் பணியாளர்களாக நியமிக்கப்பட்டார்கள்.

1997–98ல், தடுப்பூசிப் பணிகள் தங்குதடையின்றி மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாவட்டக் கால்நடை மருத்துவமனைகளுக்கு, மருந்துக்கு ஒதுக்கப்பட்ட ரூ.7.03 கோடியும் எல்லா நிலையங்களுக்கும் மருந்துக்காகப் பகிர்ந்தளிக்கப்பட்டிருக்கிறது.

புதிதாக 276 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் 1996–97ல் நிறுவப்பட்டன. 97–98ல் 8,388 பால்வளத் தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தி முடிக்கப்பட்டிருக்கின்றன. மகளிருக்காக இதுவரை 23 பால் உற்பத்தியாளர் சங்கங்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

ஆவின் பால் வாங்கிப் பயனடையும் நுகர்வோர் தம் நலன் கருதி, குறைந்த விலையில் பால் வழங்குவதற்காக ரூ.30 கோடி நிறுவனத்திற்கு மானியமாக வழங்கப்பட்டிருக்கிறது.

**'தாட்கோ' திட்டம்**

இந்த நிதியாண்டில் 'தாட்கோ' திட்டத்தின் கீழ் 13,000 மாடுகள் வாங்க ரூ.3.90 கோடி மானியத்துடன் வழங்கப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

பால்மாடுகள் வாங்கக் கொடுக்கப்பட்டு வரும் ரூ.3,000 மானியமும், ரூ.3,000 கடனும் ஆக மொத்தம் ரூ.6,000 என்பதை ரூ.4,000 மானியமாகவும், ரூ.4,000



கடனாகவும் ஆக மொத்தம் ரூ.8,000 ஆக உயர்த்திக் கொடுக்கத் தக்க நடவடிக்கைகள் தாட்கோ மூலம் எடுக்கப்பட்டு வருகிறது.

**திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில்**

திருச்சிராப்பள்ளி மாவட்டச் சிறப்பிதழான 'தமிழரசில்' அம்மாவட்டத்தில் அரசு மேற்கொண்டுள்ள ஆக்கப்பணிகள் பற்றி வெளியிடுவது எனது கடமையாகும்.

- கால்நடைகளுக்கு இலவசமாகச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.
- நோய்பரவும் இடங்களினைத் தெரிந்து, முன்கூட்டியே கால் நடைகளுக்கு நோய்தடுப்பூசிப் போடும் பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.
- செயற்கைமுறை கருவூட்டல் மூலம் தரம் உயர்த்தப்பட்ட பசுக்களை உருவாக்கி, பால் உற்பத்தி பெருக்கப்படுகிறது.
- கிராமங்களில் மக்கள் தொடர்பு முகாம் நடத்தி, கால்நடை நோய்களுக்கான இலவசமாகச் சிகிச்சை அளிக்கப்படுகிறது. செயற்கைக் கருவூட்டல் பணி தீவிரப்படுத்தப் பட்டுள்ளது.

மேற்காணும் பணிகளை மேலும் விரிவாகவும் சிறப்பாகவும் நடத்தித் திருச்சி மாவட்டத்தில் கீழ்க்காணும் வளர்ச்சித் திட்டங்கள் கடந்த 2 ஆண்டுகளில் செயல்படுத்தப் பட்டுள்ளன.

**கால்நடை பெரு மருத்துவமனை வளாகம்**

திருச்சிராப்பள்ளி கால்நடை பெருமருத்துவமனை வளாகத்தில்

---

திருச்சிராப்பள்ளியில் உள்ள டாக்டர் ஜி.வி. புற்றுநோய் மருத்துவமனை அந்த மாவட்ட மக்களுக்கு என்று மட்டுமல்லாமல், சுற்றுப்பட்ட மாவட்ட மக்களையெல்லாம் புற்றுநோயிலிருந்து பாதுகாக்கும் அருமை பெருமை மிக்கதாகத் திகழ்கிறது.



50 படுக்கைகள் கொண்ட இந்த மருத்துவமனையின் இன்னொரு சிறப்பு – இங்கே ஏழை எளிய மக்களுக்கு இலவசமாகவே சிசிச்சையளிக்கப் படுகிறது.

அரசின் நிழலில் உள்ள இந்த மருத்துவமனை மூலம் – ஸ்ரீரங்கத்தில் உள்ள அரசு மருத்துவமனையின் 44 நோயாளிப் படுக்கைகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

★ ★ ★

*"சாதி, ஆணவம், சுயநலம் ஆகியவற்றை விட்டொழித்தால்தான் முன்னேற முடியும்!"* – **அறிஞர் அண்ணா**

செயல்பட்டுவரும், கால்நடை மருத்துவமனையில் நுண்கதிர் இயக்கப்பிரிவிற்கு ரூ. 8 இலட்சத்தில் 26.10.1997 அன்று புதிய கட்டடம் மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் துவக்கப்பட்டு சிறப்புறச் செயல்பட்டு வருகிறது.

நுண்கதிர் இயக்கப்பிரிவில் நுண்கதிர் இயக்கச் சாதனங்கள் மற்றும் தேவையான அனைத்துக் கருவிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

குழுமணி மருந்தகம்

திருச்சி மாவட்டத்தில் குழுமணியில் அமைந்துள்ள கால்நடை மருந்தகத்திற்கு ரூ.4 இலட்சம் செலவில் புதியதாக கட்டடம் கட்டப்பட்டு மேற்படி கட்டடம் 26.10.1997 அன்று மாண்புமிகு தமிழக முதல்வரால் திறந்து வைக்கப்பட்டு செயல்பட்டு வருகிறது.

1997–98 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்ட உள்ளமைப்பு வசதி நிதியிலிருந்து "அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்" கீழ் ரூ.10 இலட்சம் செலவில், பாலக்கரை கால்நடை மருத்துவமனையில் பயிற்சி நிலையம் ஒன்று கட்டப்பட்டு வருகிறது. விரைவில் அது முடிவடையும் தருவாயில் உள்ளது.

*கடந்த இரண்டரை ஆண்டு காலத்தில் மாண்புமிகு தலைவர் **கலைஞர்** முதலமைச்சராகப் பொறுப்பேற்றபின்பு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்ட கால்நடை மருந்தகங்கள் 163.*

*கால்நடைப் பட்டதாரிகள் 174 பேருக்கு தேர்வாணையத்தின் மூலம் தெரிவு செய்யப்பட்டு புதிய பணி நியமனங்கள் 31.10.98 அன்று வழங்கப்பட்டு நியமிக்கப்பட்டுள்ளார்கள்.*

*கால்நடைத் துறையின் பணிகள் சிறப்பாகவும் முனைப்பாகவும் மாறிவரும் காலச் சூழ்நிலைகளுக்கு ஏற்ப அறிவியல் கண்ணோட்டத்தில் வளர்ச்சிக்கான மற்றொரு இயக்குநர் பதவி துறைக்குத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.*

புதியதாக கால்நடை மருத்துவமனை

கால்நடை மருந்தகத்தைக் கால்நடை மருத்துவமனையாகத் தரம் உயர்த்துதல் என்ற திட்டத்தின்கீழ் இம்மாவட்டத்தில் பலபணிகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன. அதுபற்றிய விவரம் வருமாறு :

| கால்நடை மருத்துவமனை பெயர் | இயங்கும் நாள் |
|---|---|
| வையம்பட்டி ... | 1.10.1997 |
| துவரங்குறிச்சி .... | 1.10.1997 |
| மணப்பாறை .... | 1.8.1998 |
| திருவெறும்பூர் ..... | 1.8.1998 |

இதுதவிர, திருச்சிராப்பள்ளி மற்றும் முசிறி கோட்டங்களில் செயல்பட்டுவரும் 79 கால்நடை கிளைநிலையங்களுக்கு இணையாக 79 பார்வைக் கிளை நிலையங்கள் செயல்பட்டு, கால்நடைகளுக்குத் தேவையான சிகிச்சைப் பணிகளைச் செயற்கைமுறை கருவூட்டல் பணிகள் மேற்கொண்டு வருகின்றன.



1996–ஆம் ஆண்டிற்குப் பிறகு கால்நடை பராமரிப்புத்துறை, திருச்சிராப்பள்ளி மண்டலத்தின் புரிந்துள்ள சாதனைகள் மகத்தானவை.

கால்நடை மருந்தகங்கள்

புதியதாகத் துவக்கப்பட்ட கால்நடை மருந்தகங்கள் விவரம் வருமாறு :

1997–98, 1998–99. ஆம் ஆண்டுகளில் பன்னாங்கோம், மகிழம்பாடி, நாகலாபுரம், கனக்காம்பட்டி, மைக்கேல்நாயக்கன்பட்டி, குமுகுர், புத்தாளம்பட்டி ஆகிய இடங்களில் கால்நடை மருந்தகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

தீவிர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் (மினிகிட்) தீவின விதைகள் 40–பயனாளிகளுக்கு வழங்கப்பட்டு அதன் இலக்கு எட்டப்பட்டிருக்கிறது.

இவ்வாறு, தலைவர் கலைஞர் அரசின் கால்நடைப் பராமரிப்புத்துறை ஆற்றிவரும் பணிகள் கணக்கற்றவை; அவற்றின் சுருக்கமே இந்தக் கட்டுரை.

# "கலைஞர் எங்களுக்குக் கடவுள் மாதிரிங்க !"

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார் நினைவு திருமண நிதி உதவித் திட்டத்தின் கீழ், கடந்த இரண்டாண்டுகளில் 2,824 பயனாளிகளுக்கு ரூ.2,82,40,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

அன்னை அஞ்சுகம் அம்மையார் நினைவு கலப்புத் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், கடந்த இரண்டாண்டுகளில் ரூ.5,10,000 நிதி வழங்கப்பட்டு 51 பயனாளிகள் பயனடைந் துள்ளனர்.

டாக்டர் தர்மாம்பாள் அம்மையார் நினைவு விதவை மறுமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், கடந்த இரண்டாண்டுகளில் 23 நபர்களுக்கு ரூ.1,61,000 வழங்கப்பட்டுள்ளது.

தமிழக அரசு விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், கடந்த 2 ஆண்டுகளில், 104 நபர்களுக்கு ரூ.3,12,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.



ஆதரவற்ற பெண் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், 1996-97, 1997-98 நிதியாண்டுகளில் 8 நபர்களுக்கு ரூ.24,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி நினைவு மகப்பேறு நிதியுதவித் திட்டத்தின் கீழ், கடந்த 2 ஆண்டுகளில், 16,100 நபர்களுக்கு ரூ.47,80,000 நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

இலவசத் தையல் இயந்திரம் வழங்கும் திட்டத்தின் கீழ், கடந்த 2 ஆண்டுகளில், 160 நபர்களுக்கு இலவசமாகத் தையல் எந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

மாவட்டச் சமூகநல அலுவலரைத் தேடிப் பிடித்து, இந்த விவரங்களையெல்லாம் சேகரித்த நாம் - பயனாளிகள் யாரையாவது நேரில் பார்த்து விவரம் சேகரிக்க எண்ணினோம்.

தமிழ்நாடு அரசு - விதவை மகள் திருமண நிதியுதவித் திட்டத்தின் கீழ், பயன்பெற்ற ஒருவர், அருகிலேயே இருப்பதாகக் கூறி அவர்களை அழைத்து வந்தார் மாவட்டச் சமூகநல அலுவலகக் கண்காணிப்பாளர்.

உறையூர் - கீரைக் கொல்லைத் தெருவைச் சேர்ந்த சாந்தி என்ற அந்த விதவைப் பெண்மணியிடம் விசாரித்தோம்; அவர் சொன்னார் :

"என்னோட வீட்டுக்காரரும் (திரு.ராஜரத்தினம்) நானும் கூலி வேலை செய்து பிழைப்பு நடத்திகிட்டிருந்தம்க. எங்களுக்கு பிந்து, நந்தினின்னு ரெண்டு பொண்ணுங்க. திடும்னு நெஞ்சுவலி வந்து... அவரு எங்களையெல்லாம் அனாதையா உட்டுட்டுப் போயிச் சேர்ந்துட்டாரு..."- அந்த அம்மையார் கண்கலங்கினார்.

"அப்ப...நீங்களும் அவருமா ஏதாவது பணம் சேர்த்து வெச்சிருந்தீங்களா?"

"வீடுங்கள்ல பாத்திரம், பண்டம் தேய்ச்சிக் கூலி வேலை செய்யிற எங்களுக்கு, சேர்த்து வைக்கிற அளவுக்கு ஏதுங்க பணம்?"

"ஒங்க பொண்ணுங்க படிச்சி ருக்கா?"

"கெடயாதுங்க; வசதியில்ல. அப்பதான் ஒருத்தர் யோசனை சொன்னதன் பேர்ல, அரசாங்கத் துக்கு விதவை மகள் திருமண உதவிகேட்டு அரசுக்கு மனுச் செய்தேன். மூத்த பொண்ணு கல்யாணத்துக்கு ஐயாயிரம் ரூவா குடுத்தாங்க. **இந்த வகையில...கலைஞர் எங்களுக்கு கடவுள் மாதிரிங்க.** அவர் மட்டும் பணம் தரலைன்னா...அப்பிடியொரு நல்ல காரியம் எங்க குடும்பத்துல நடந்தே இருக்காது !" என்று வருத்தமாகச் சொன்னார் திருமதி சாந்தி.

- இந்திரன்



# எங்கள் மாவட்டம்

வை. மூர்த்தி, இ.ஆ.ப.
மாவட்ட ஆட்சியர்

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தமிழகத்தின் நடுநாயகமாக, இதயப்பகுதியாக அமைந்துள்ள மாவட்டம், காவிரி அன்னை களி நடம்புரியும் மாவட்டம்; எம்மதமும் சம்மதம் என்று இறுமாப்பு கொள்ளும் வகையில் சைவம், வைணவம், கிறித்துவம், இஸ்லாம் என அனைத்து மதத்தினரும் அன்றாடம் சாதி மத பேதமின்றி சமத்துவமாக தினம் வலம் வரும் மாவட்டம்.

சங்க காலம் தொட்டு சோழ மன்னர்கள் ஆண்ட பூமி இது. சிராப்பள்ளி: தேவாரம் கூறும் சிராப்பள்ளிக் குன்று தான் இன்று மலைக்கோட்டை. உறையூர் என்ற பெருநகரை விட்டு ஒதுங்கினாற்போல குகைகளைத் தங்கள் இருப்பிடமாகக் கொண்டு சமணர்கள் வாழ்ந்த இடம். இங்கே சிரா என்ற சமண முனிவர் பள்ளி (கல்விக்கூடம்) தவச்சாலை அமைத்துத் தங்கியிருந்திருக்கிறார்.

கார் ஏறும் கோபுரமும் கதிர் ஏறும் சோலைகளும் தேர் ஏறும் வீதிகளும் கொண்டிருந்த உறையூரில் உதித்த கோழிகளும் வீரம் செறிந்தவை. ஒரு நாளில் கோழிக்கும் யானைக்கும் நடந்த சண்டையில் கோழி வெல்ல, வீரக் கோழியை வியந்த வேந்தன், உறையூரைக் கோழியூர் என்றான்.

இதனாலேயே சிலப்பதிகாரமும் பழந்தமிழ் நூல்களும் உறையூரைக் கோழியூர் என்று குறிப்பிடுகின்றன.

மாவட்டத்தில் வாழுகின்ற மக்கள் தொகையில் 75 விழுக்காடு மக்கள் வேளாண் தொழிலைச் செய்து வரும் மாவட்டமாக இருப்பினும் தமிழக அரசின் ஆக்கபூர்வமான திட்டங்களினால் தொழில் துறையிலும் வளர்ந்து வரும் மாவட்டமாக



திருச்சிராப்பள்ளி மாவட்டம் விளங்குகிறது. பாரத மிகுமின் நிறுவனம், டால்மியா சிமெண்ட்ஸ், காவேரி சர்க்கரை ஆலை, கோத்தாரி சர்க்கரை ஆலை, திருச்சிராப்பள்ளி ஸ்டீல் ரோலிங்மில்ஸ், சிம்கோ மீட்டர்ஸ் பொன்மலை ரயில்பெட்டித் தொழிற்சாலை, துப்பாக்கித் தொழிற்சாலை எனப் பலவகைத் தொழில்களும் நிறைந்துள்ள மாவட்டம். சுண்ணாம்புக்கல், ஜிப்சம் போன்ற கனிம வளங்களும் நிறைந்துள்ள மாவட்டமாகும். கல்வி நிறுவனங்களும் நிறைந்துள்ள மாவட்டமாகும். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் அரசின் தொழில் திட்டங்கள் மூலம் செயல்படுத்தப்படும் திட்டங்களைத் தவிர சிறப்புத் திட்டமாக கல்வி பயின்றவர்களும், கைத்தொழில் கற்றோரும், ஏனையோரும் தொழில் தொடங்க ஏதுவாய் சுமார் ஐநூறு திட்டங்கள் அடங்கிய "திட்ட வங்கி" மாவட்டத் தொழில் மையத்தில் இயங்கி வருகிறது. இவ்வங்கியின் மூலம் நல்ல ஆலோசனைகளைத் தந்து தொழில்களை பெருக்கிட நடவடிக்கை எடுத்துள்ளோம். ஆலைகள் வைப்போம், கல்விச் சாலைகள் வைப்போம் என்று

அண்ணல் காந்தியடிகள், டாக்டர் அம்பேத்கர், பாரதியார் பாவேந்தர் பாரதிதாசன், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா போன்றவர்கள் மட்டுமல்ல. உலகில் வாழ்ந்து மறைந்த மற்றும் வாழுகின்ற சமுதாயத் தலைவர்கள் அனைவரும் அன்றிலிருந்து இன்றுவரை சாதிகள் ஒழியப் பாடுபட்டு வந்தனர், வருகின்றனர். அத்தனை தலைவர்களும், உலகிலுள்ள அனைத்து மக்களும் சிந்தித்துக் கூறிய கருத்திற்கு இன்றைய மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் அடிக்கல் நாட்டியுள்ளார்கள் — சமத்துவபுரத்திட்டத்தால்.

இந்தியத் திருநாடே சமத்துவபுரமாக மாற வேண்டும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் சூளுரைக்கப்பட்டு தமிழ் நாட்டிலுள்ள கிராமங்கள் தோறும் சமத்துவபுரங்கள் இன்றைய தினம் உருவாகி உள்ளன. இதனுடைய தாக்கம் இன்றில்லாவிட்டாலும் வெகு விரைவில் வெற்றியைப் பெறும் என்பது திண்ணம். குறிப்பாக



சொன்ன பாட்டுக்கொரு புலவன் பாரதியின் கனவை நனவாக்கும் மாவட்டமாகும்.

*சாதி மத பேதங்கள் மூட வழக்கங்கள்*
*தாங்கி நடைபெற்று வரும் சண்டை உலகிதனை*
*ஊதையினில் துரும்பு போடும் அலைக்கழிப்போம்; பின்னர்*
*ஒழித்திடுவோம்; புதியதோர் உலகம் செய்வோம்;*

— என்றார் புரட்சிக் **கவிஞர் பாரதிதாசன்**

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் கல்லக்குடி, பண்ணப்பட்டி கிராமங்களில் கடந்த ஆண்டில் சமத்துவபுரப்பணிகள் தொடங்கி தற்போது முடிவடையுந்தறுவாயிலுள்ளது. அதேபோல் இவ்வாண்டில் தோளூர்பட்டி, வடக்குவெளி ஆகிய கிராமங்களில் இத்திட்டம் நிறைவேற்ற நிலம் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இதுவல்லாமல் மாவட்டம் முழுவதும் "இல்லம் நான்கு, உள்ளம் ஒன்று" என்ற அடிப்படைத் தத்துவத்தை அடித்தளமாக்கி சுமார் 1,000 இல்லங்களை உருவாக்க முனைந்துள்ளோம். இதில் குறிப்பிடும்படியாக கூற வேண்டுமே எனில்

இத்திட்டத்திற்கு — சமத்துவபுரத்திட்டத்திற்கு — நாளுக்கு நாள் மக்களின் பேராதரவு பெருகி வருகிறது என்பதைத் தெளிவாகக் கூறியாக வேண்டும்.

### *அண்ணா மறுமலர்ச்சித் திட்டம்*

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சிறப்புத் திட்டங்களில் பேரறிஞர் பெருந்தகை பெயரால் செயல்படுத்தப்படும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டமானது திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்று வருகிறது. கடந்த 1997—98 ஆம் ஆண்டில் லால்குடி சட்டமன்ற தொகுதி கருடமங்கலத்திலும், மருங்காபுரி சட்டமன்ற தொகுதி கஞ்சநாய்க்கன்பட்டியிலும் திருவரங்கம் சட்டமன்ற தொகுதி பெட்டவாய்த்தலையிலும், முசிறி சட்டமன்ற தொகுதி பாப்பாக் குறிச்சியிலும், உப்பிலியபுரம் சட்டமன்ற தொகுதி திருத்தலையூரிலும், தொட்டியம் சட்டமன்ற தொகுதி ஏழுர்பட்டியிலும் திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி எரகுடியிலும் ஆகிய ஏழு தொகுதிகளைச் சேர்ந்த ஏழு கிராமங்களில் ரூ.462.54 இலட்சம் செலவில் 875 பணிகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. அதேபோல் இவ்வாண்டு இலால்குடி சட்டமன்ற தொகுதி சிறுமயங்குடி, மருங்காபுரி சட்டமன்ற தொகுதி வெள்ளாளபாளையம், திருவெறும்பூர் சட்டமன்ற தொகுதி நவல்பட்டு, திருவரங்கம் சட்டமன்ற தொகுதி இனாம்குளத்தூர், முசிறி சட்டமன்ற தொகுதி அய்யம்பாளையம், தொட்டியம் சட்டமன்ற தொகுதி எம்.புதுப்பட்டி, உப்பிலியபுரம் சட்டமன்ற தொகுதி வரதராஜபுரம், குளித்தலை சட்டமன்ற தொகுதி கண்ணுடையான்பட்டி ஆகிய கிராமங்களில் ரூ.372.810 இலட்சம் மதிப்பீட்டில் 550 பணிகள் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் இக்கிராமங்களில் அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

### *நமக்கு நாமே திட்டப்பணிகள்*

1997—98 ஆம் ஆண்டில் இத்திட்டத்தின் கீழ் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திலுள்ள 14 ஒன்றியங்களிலும் ரூ.30.03 இலட்சம் செலவில் 104 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இதில் அரசு நிதி ரூ.22.40 இலட்சமாகும். மக்களின் பங்குத்தொகை ரூ.7.63 இலட்சமாகும்.

நடப்பு நிதி ஆண்டில் ரூ.28 இலட்சம் செலவில் 52 பணிகள் நடைபெற்று வருகின்றன. மேலும் தோரூர்பட்டியில் ரூ.2[illegible] இலட்சம் சமுதாயக்கூடம் கட்டும் பணியும், மேட்டுப்பாளையத்தில் ரூ.1.75 இலட்சம் மதிப்பீட்டில் பள்ளிக் கட்டடம் கட்டும் பணியும் நடைபெற்று வருகிறது.

அனைத்திந்திய வானொலியின் திருச்சிராப்பள்ளி வானொலி நிலையம் - திருச்சிக்கு மட்டுமன்றித் தஞ்சாவூர், கரூர், பெரம்பலூர், புதுக்கோட்டை, நாமக்கல், சேலம் மாவட்டம் வரை தமது ஒலிபரப்பை அஞ்சல் செய்கிறது.

இந்த வானொலி நிலையத்தின் அருகிலேயே குறைந்த சக்தி வாய்ந்த தொலைக்காட்சி அஞ்சல் நிலையமும் 1985-ல் அமைக்கப்பட்டது; இதன் மூலம் அந்த வட்டார மக்களும், கலைஞர்களும் பெரும் பயன்பெற்று வருகிறார்கள்.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பொதுமக்களின் நூறு சதவீத பங்கேற்புடன் மணிகண்டம் ஒன்றியம் சேதுராப்பட்டி கிராமத்தில் நமக்கு நாமே திட்டத்தின் கீழ் ஒரு கால்நடை மருந்தகம் கட்டப்பட்டுள்ளது. இதனுடைய மதிப்பு ரூ.1 இலட்சமாகும். மேலும் கருமலை என்னும் கிராமத்தில் நூறு சதவீத பொதுமக்கள் ஒத்துழைப்போடும் பங்கோடும் ஒரு நூலகக் கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இது அந்த கிராமப் பெண்களாலேயே தங்களுடைய உடல் உழைப்பு மற்றும் பொதுமக்களின் 100 சதவீத பங்குத் தொகையுடன் கட்டப்பட்டதாகும். இதன் மதிப்பு ரூ.80,000 ஆகும். இந்த கட்டடத்தில் நூலகம் இயங்கும்; பத்திரிகைகள், புத்தகங்கள் தேவையான அளவு விநியோகிக்கப்பட்டு பெண்கள் சுயஉதவிக் குழுக்கள் மூலம் பராமரிக்கப்படவுள்ளது. இதுதவிர அந்தநல்லூர் ஊராட்சி ஒன்றியம் கொடியாலம் கிராமத்தில் பச்சடி வாய்க்கால் மற்றும் குடிமராமத்து வாய்க்கால் ஆகிய இருவாய்க்கால்களிலும் தூர் வாரும் பணியினை பொதுமக்களே மேற்கொண்டுள்ளனர். இதேபோன்று கூத்தப்பார் பேரூராட்சி பகுதியிலும், துறையூர் ஒன்றியம், வரதராஜபுரம் கிராமத்தில் ரூ.30,000 மதிப்பில் வடிகால் கட்டும் பணியும், மக்களின் நூறு சதவீத பங்கேற்புடன் மேற்கொள்ளப்பட்டது. நூறு சதவீதம் மக்கள் பங்கு கிடைக்காத பட்சத்தில் குறைந்தது 50 சதவீதமானது மக்கள் பங்குத்தொகை பெற்று பணிகள் மேற்கொள்ளும் மக்களை ஊக்குவித்தும் இந்தத் திட்டத்தின் பலனை மாவட்டம் முழுவதும் அடையும் வகையிலும் மக்களால் வரவேற்பு பெறும் வகையிலும் சிறப்பாக செயல்பட நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டுள்ளது.

அரசின் திட்டங்கள் ஏராளம்; இத்திட்டங்களின் கீழ் நடைபெற்று வரும் பணிகளும் ஏராளம்; சிறப்பாக பொதுமக்களின் ஈடுபாடும், பங்கேற்பும் மிகச் சிறப்பாக உள்ளதால் அனைத்துதுறை திட்டப்பணிகளிலும் இம்மாவட்டம் முதன்மையான முன்னோடியான மாவட்டமாக பீடுநடை போட்டுத் திகழ்கிறது.

# தாயைத் தடுப்பவன் யாரடா!

- புலவர் உதயை மு.வீரையன்

எட்டுத் திசையும் கொட்டி முழக்கி
இன்னும் இருப்பவள் அவளே!
எத்தனை எத்தனை சோதனை களையும்
எதிர்த்து வென்றவள் அவளே!
கெட்டு விடாமல் எங்களை யெல்லாம்
கட்டிக் காத்தவள் அவளே!
கெடுமதி யாளரின் சூழ்ச்சியை யெல்லாம்
வெட்டி எறிந்தவள் அவளே!

தமிழைத் தடுப்பவன் யாரடா - என்!
தாயைத் தடுப்பவன் யாரடா!

கல்லும் மண்ணும் தோன்றும் முன்னே
பிறந்ததே எங்கள் குடியடா
கப்பல் செலுத்தி வணிகம் செய்து
களைத்துப் போன குடியடா
எல்லாம் இழந்தோம் தமிழைத் தவிர;
இதையும் இழக்க முடியுமா?
எங்கள் கோயில் இங்கே தமிழ்மொழி
ஏன் என்று கேட்டால் விடியுமா!

*தமிழைத் தடுப்பவன் யாரடா - என்!*
*தாயைத் தடுப்பவன் யாரடா*

வெட்ட வெட்ட முளைக்கும் இந்த
விந்தை மரமே தமிழாகும்;
விழுது விட்டு வளர்த்து விட்டு
விலகி நிற்கும் மொழியாகும்;
குட்டக் குட்ட குனிந்த காலம்
முடிந்து நிரம்ப நாளாகும்;
கொடிய பகையே விலகிப் போபோ
கொதித்து எழுந்தால் தூளாகும்;

*தமிழைத் தடுப்பவன் யாரடா - என்!*
*தாயைத் தடுப்பவன் யாரடா*

**தீண்டா மையை வளர்க்க நினைத்தால்**
**தேசம் இனிமேல் எதற்காக ?**
தெய்வ மொழியே அதுதான் என்றால்
தேய்ந்து போனதும் எதற்காக?
ஆண்டவ னுக்குத் தமிழ்புரி யாதாம்;
அப்புறம் நாங்கள் எதற்காக?
அருந்தமிழ்த் தாய்க்கே இடமில்லை யென்றால்
அந்தக் கோயில்கள் எதற்காக?

*தமிழைத் தடுப்பவன் யாரடா - என்!*
*தாயைத் தடுப்பவன் யாரடா*





அதுக்காக ஒதுக்கீடு பண்ணினாங்க. ஆனா... அடுத்த சில நாள்லயே ஆட்சி கலைக்கப் பட்டதால அதை நிறைவேத்த முடியாதபடி ஆயிட்டு. இப்ப நான் எம்.எல்.ஏ.வான பிறகு, மறுபடி நான் அதே கோரிக்கையை வெச்சேன்; போன வருஷம் **கலைஞர்** கருணையால அந்த மாபெரும் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை நிறைவேத்தி முடிச்சம். இன்னமும் அதோட விரிவாக்க வேலைகள் நடந்துகிட்டிருக்கு. அதன்மூலம் ஒரு இலட்சம் பேருக்கு மேல பயனடையிறாங்க. துளிக்கூட தண்ணீர்த் தட்டுப்பாடு இப்ப கிடையாது".

"நகருக்குள்ள சாலை வசதியெல்லாம்?..."

"இது வளர்ற மாவட்டம் இல்லீங்க; நல்லா வளர்ந்தபழைய மாவட்டம். இருந்தாலும், அந்த வகையில கொஞ்சம் குறைபாடு இருக்கத்தான் செய்தது. முதலமைச்சர்கிட்ட சொல்லி அதையும் நான் அற்புதமா செய்துட்டேன். காவிரி பாலம் முதல்

# வளர்ச்சிப் பணிகள்

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் ஏழெட்டுச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதிகள் இருக்கின்றன; எனினும், மாவட்டச் சிறப்பு மலருக்கான செய்திகள் சேகரிக்கச் சென்றிருந்த நமக்குத் திரு. அன்பில் பொய்யாமொழி அவர்கள் எளிதில் கிடைத்தார்.

மறைந்த திரு. அன்பில் தர்மலிங்கம் அவர்களின் புதல்வரான அவரிடம் - தனது தொகுதிக்கு அவர் ஆற்றியுள்ள பணிகள் பற்றிக் கேட்டோம்.

"நான் ஒரு தொகுதிக்குச் சட்டமன்ற உறுப்பினர்ன்னாலும்கூட, மக்களுக்கு நல்லது செய்றதுங்கிற விஷயத்துல பொதுவா எல்லாருக்கு மாதான் செயல்பட்டு வர்றேன். திருச்சியில காவேரிப் பாக்கத்துலேருந்து சுந்தர் நகர் வரை உள்ள என் தொகுதியில சுமார் ரெண்டேகால் இலட்சம் வாக்காளர்கள் இருக்காங்க. ரொம்பப் பெரிய தொகுதி இது. இதுல அவர் தொகுதி- இவர் தொகுதின்னெல்லாம் நான் பிரிச்சுப் பார்க்க முடியாது. இதுல இன்னொரு முக்கியக் காரணம்... அங்கங்கே இன்னொருத்தர் தொகுதி குறுக்கிடும்!" என்று கூறிச் சிரிப்புடன் தன் பேச்சைத் தொடர்ந்தார் பொய்யாமொழி.

"அபிஷேகபுரம் டவுன் பஞ்சாயத்து மக்களுக்கு... அப்பா காலத்துலேர்ந்தே கொஞ்சம் குடிநீர்த் தட்டுப்பாடு இருந்தது. 1989ல், அதுபத்தி தலைவர்கிட்ட (முதல்வர்) நினைவூட்டினேன்; சட்ட சபையிலேயும் பேசினேன். உடனேயே ஐம்பது இலட்சம் ரூபாய்



திரு. **அன்பில் பொய்யாமொழி** எம்.எல்.ஏ.



திருச்சி மாவட்டச் சுற்றுலாத் தலங்களில் குறிப்பிடத்தக்க ஒன்றான – முக்கொம்பு

மத்தியப் பேருந்து நிலையம் வரைக்கும் உள்ள சாலை... புத்தூர்லேர்ந்து வயலூர் போற சாலை... குமரன் நகர் சாலைங்களையெல்லாம் - சென்னைல செய்றாப்ல பேவர் மிஷின் மூலமா போட வெச்சேன். மக்கள்லாம் அதைப் பார்த்துட்டு திருச்சி நகரம் பூராவும் அதேமாதிரி ரோடு போடணும்கிறாங்க; மழைக்காலம் வந்துட்டதால அந்த வேலையை நிறுத்திவெச்சிருக்கம். அப்புறமா, திருச்சியில உள்ள இன்னும் சில முக்கியச் சாலைங்களையெல்லாம் அதேமாதிரி அரசு உதவியோட மாத்தணும் னிருக்கேன்!...''

“வேறெ?...”

“இங்கே திருச்சிராப்பள்ளி அண்ணல் காந்தி அரசுப் பொது மருத்துவமனையில் ஸ்கேன் பண்ற வசதி இல்லாமெ இருந்தது பத்தி சட்டசபையில பேசினேன்; அண்ணன் ஆர்க்காட்டார் அதை ஒரு கோடி ரூபா நிதி ஒதுக்கி நிறைவேத்தி வெச்சார். ஸ்கேன் பண்றதுன்னா வெளீல ரெண்டாயிரம் ரூபா வரையோ அதுக்கு மேலயோ ஆகும். இப்ப இங்கே முந்நூத்தி ஐம்பது ரூபாதான்; ரொம்ப ஏழைன்னா இலவசமாவே ஸ்கேன் எடுக்கலாம்னு ஏற்பாடு செய்தேன். இப்ப இங்கே கி.ஆ.பெ. மருத்துவக் கல்லூரி வந்தாச்சு; இது எங்க அப்பா கண்ட கனவு - தலைவர் கலைஞர் மூலமா நிறைவேறினதுல... எங்களுக்கெல்லாம் ரொம்பவும் மகிழ்ச்சி...”

“நீங்கள் சட்டமன்ற உறுப்பினர் ஆன பிறகு செய்த பணிகள் பற்றி...”

''புரிகிறது; சொல்கிறேன். கள்ளாங்காடு உய்யகொண்டான் வாய்க்கால் கரையில் ஒரு நல்ல ரோடு போடவிருக்கிறோம்; கோட்டை மேம்பாலம் கட்ட அனுமதி கேட்டிருக்கிறோம்; இதற்கு முப்பது கோடி ரூபாய் செலவாகும் என்று சொல்லியிருக்கிறார்கள்...''

''திருச்சிராப்பள்ளியில் ரயில்வே மேம்பாலம் கட்டுவது பற்றி மத்திய அமைச்சர் அறிவித்திருக்கிறாரே?..'' என்று நாம் கேட்க - திரு.பொய்யாமொழி எம்.எல்.ஏ. ஒரு சிரிப்போடு இப்படிப் பதில் சொன்னார்!''

“அது ஒரு பெரிய கதை போங்க! குஜ்ரால் இந்தியப் பிரதமராக இருந்த காலத்தில், ரயில்வே அமைச்சராக இருந்த பஸ்வான் மூலம் நான்தான் அந்த மூன்று பாலங்களையும் கட்ட மத்திய அரசில் சாங்ஸன் வாங்கினேன்.

''திருச்சிராப்பள்ளி நகரவாசிகளுக்குக் குடிநீர் உள்ளதா?''

“காவிரி மூலம் இங்கே பல பகுதிகள் குடிநீர் வசதி பெறுகின்றன. நகரமன்றத் தலைவராகப் பாலகிருஷ்ணன் இருந்தபோது, கொள்ளிடத்திலிருந்து குடிநீர் கொண்டுவரத் தீர்மானித்து, கூடுதலாக ஒன்பது மேனிலை நீர்த் தேக்கத் தொட்டி கட்ட முடிவு செய்திருந்தார். அதற்கு, **கலைஞர்** முதலமைச்சரான

பிறகுதான் அனுமதி கிடைத்தது. இந்த நிதியாண்டுக்குள் அந்த வேலை முழுமையாக நிறைவடைந்து விடும்".

''கழிவுநீர் அகற்றும் பணிபற்றி ஏதாவது சொல்லுங்களேன்?''

"திருச்சி நகரக் கழிவு நீரெல்லாம் காவிரியில்தான் போய் விழுந்துகொண்டிருந்தது; அதைத் தடுக்க மாசுக் கட்டுப்பாடு வாரியம் மூலம் தகுந்த ஏற்பாடு செய்திருக்கிறேன். இந்த மழைக் காலத்தில், நகரிலுள்ள சாக்கடையில் எல்லாம் தூர் வாரப்பட்டது; மழைக்காலம் முடிந்தபின், மீண்டும் தூரெடுப்போம். உய்ய கொண்டான் வாய்க்காலில் பீம நகரில் உண்டகொண்டான் பகுதியில் ஒரு சைகிள் மட்டுமே போகிற அளவிற்குக் குறுகிய பாலம் ஒன்று இன்றோ நாளையோ என்ற நிலையில் இருந்தது. எம்.எல்.ஏ. நிதியிலிருந்து அதற்கு மூன்று இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்து, அதைக் கொஞ்சம் அகலமாகக் கட்டி முடித்தேன். அங்கிருந்த குடிசைவாசிகளுக்கெல்லாம் அஸ்பெஸ்டாஸ் ஷீட் போட்டுத் தீப்பிடிக்காத வீடுகள் கட்டிக் கொடுத்திருக்கிறோம்..."



*திருச்சி பாப்பாகுறிச்சியில், அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தில் கட்டப்பட்ட மேனிலைத் தண்ணீர்த் தொட்டி.*

''குடிசை மாற்றுவாரிய வீடுகள் இங்கே இல்லையா?''

"ஏன் இல்லை? என் காலத்தில்தான் குடிசைவாழ் மக்களுக்கெல்லாம் இங்கே அடுக்குமாடி வீடுகள் கட்டித்தர ஏற்பாடு செய்தேன். மேல சிந்தாமணியில, நகர சுத்தித் தொழிலாளிங்க நூத்தம்பது பேருக்கு வீடுகள் கட்டித் தரப் போறம். அவங்கள்லாம் இருக்கிற பகுதியில ஒரு கைப்பம்பு போட்டுத் தந்தேன். அப்பா காலத்துலதான் அவங்கள்லாம் என்.ஜி.ஓ. ஆனாங்க..."

"சரி, அவங்களுக்கெல்லாம் வேற ஏதாவது?..."

''சுத்திகரிப்புத் தொழில்ல இருக்கிற ஆண் தொழிலாளிகளுக்கு மட்டும் தலைல சுத்திக்கத் துணிங்க கொடுத்துகிட்டிருந்தாங்க; இதுல என்ன பாரபட்சம்னு நான் சட்டசபையிலயே கேட்டு, இப்பொழுது பெண்களுக்கும் அப்படியொரு துணி வழங்கப்படுகிறது.

- என்றெல்லாம் தன் சாதனைகளை அடுக்கிக் கொண்டே போனார் பொய்யாமொழி.

★ திருச்சிராப்பள்ளி மத்தியப் பேருந்து நிலையம் இன்னும் விரிவாக்கப்பட இருக்கிறது.

★ அன்பில் தர்மலிங்கம் காலத்தில் உயர்நிலைப் பள்ளியாக இருந்த பாடசாலையொன்று, மேனிலைப்பள்ளி ஆக்கப்பட்டிருக்கிறது.

சின்னைய பிள்ளை சத்திரம் உள்ள இடம் போக்குவரத்து நெருக்கடி உள்ள இடமாக இருப்பதால், அதற்குச் சற்றுத் தள்ளி வரவிருக்கும் பை-பாஸ் ரோட்டுக்கு பேருந்து நிறுத்தம் மாற்றப்படவிருக்கிறது.

★ கட்சி பேதம் கருதாமல், எம்.ஜி.ஆர்.-அண்ணா தி. மு.க. கவுன்சிலர் உள்ள ஒரு வார்டில் ரூ.4 இலட்சம் செலவில் ஒரு பள்ளிக்கூடம் கட்டித் தரப்பட்டிருக்கிறது.

-மூச்சுவிடாமல் இதையெல்லாம் சொல்லிக் கொண்டேபோன அவர் பேச்சில் குறுக்கிட்டோம்.

''உங்கள் தொகுதியைப் பொறுத்தவரை மக்களுக்கு வேற ஒரு குறையும் கிடையாதா?''

"ஒன்றே ஒன்று இருக்கிறது; அதாவது இங்கே... அங்கீகரிக்கப்படாத லே அவுட் 495 இருக்குங்க. முன்னேல்லாம் பஞ்சாயத்துத் தலைவர்கள் அனுமதிச்சாப் போதும்னு இருந்தது; இப்ப திருச்சி மாநகராட்சி ஆனப்புறம் அதுல பிரச்னை ஆயிட்டுங்கிறாங்க. அதுபத்தி விரிவா தலைவர்கிட்டே பேசணும்னிருக்கேன்; இந்தக் குறையையும் சீக்கிரமே நிவர்த்தி பண்ணீடலாம்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு!" என்று மிகவும் உறுதியோடு சொன்னார் திரு. அன்பில் பொய்யாமொழி எம்.எல்.ஏ.

இவர், தன்னுடைய தொகுதியில் பலருக்கும் இலவசத் திருமணத் திட்டத்தின் மூலம் பலன் கிட்டச் செய்திருக்கிறார்; தொழில் தொடங்க ஆர்வமுள்ள ஏழை எளிய மக்களுக்கு இலவசத் தையல் இயந்திரம்,

இஸ்திரிப்பெட்டி போன்றவைகளும் பெற்றுத் தந்துள்ளார்.

திருச்சிராப்பள்ளி நகராட்சியானது மாநகராட்சி ஆனபோது, நிதி வசதியற்ற நிலை இருந்தது; இதனால் பல திட்டங்களை நிறைவேற்றுவதிலும் சிக்கல் இருந்தது; இவரே முழு முயற்சி எடுத்துக்கொண்டு தமிழக முதல்வரிடம் கலந்துபேசி, மாநகராட்சியின் பல ஆக்கப் பணிகளுக்காக ரூ.5 இலட்சம் முன்பணமாகப் பெற்றுத் தந்திருக்கிறார்.

திரு. அன்பில் பொய்யாமொழி எம்.எல்.ஏ., மத்தியக் கூட்டுறவு வங்கித் தலைவரான பிறகு - திருச்சி மாநகரில் பெட்டிக் கடைகள் வைக்கக் கடன், டாக்டர், இஞ்சினீயர் போன்ற மேல் படிப்புக்காக ஏழை எளிய வீட்டுப் பிள்ளைகளுக்குக் கடன் - நலிவடைந்த டாக்டர்களுக்குக் கடன் போன்ற வசதிகளெல்லாம் கிட்டச் செய்திருக்கிறார்.

வீடு கட்டுவோருக்கு ரூ.10 இலட்சம் வரை இவ்வங்கி மூலம் கடன்தர வகை செய்திருக்கிறார்.

காவிரி சாலையில் ஆழ்துளைக் கிணறு, பூசாரித் தெருவில் குடிநீர்க் குழாய் இயக்கத்திற்கென மோட்டார் இணைப்பு, சிந்தாமணியில் சத்துணவு மையக் கட்டடம் பழுது பார்ப்பு, சென்னை பை-பாஸ் ரோடு அருகே முக்கொம்பில் தண்ணீர் விநியோகச் சீரமைப்பு, கருமண்டபத்தில், கூடுதல் பள்ளிக் கட்டடம், மேலப் புதூரில் கழிவறை அமைப்பு, சிந்தாமணியில் கழிவறைச் சீரமைப்பு போன்ற பல பணிகளுக்கும் தமது 'சட்டப் பேரவை உறுப்பினர் நிதி'யின் மூலம் திருச்சி மாநகரம் இன்னும் பொலிவு பெற இவர் அரும்பாடுபட்டு வருகிறார்.



திருச்சிராப்பள்ளி சந்திப்பு — புகைவண்டி நிலையம்

- பி.எல்.ராஜேந்திரன்

## காவிரித்தாய்!

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தின் நடுவே, நேர் கிழக்காகச் செல்லும் காவிரியாறு 'அகண்ட காவிரி' என்று குறிப்பிடப்படுகிறது; நொய்யல் புகைவண்டி நிலையத்திற்கு அருகிலேயே, காவிரியாறு திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்குள் நுழைகிறது.

காவிரியாற்றுடன் - அய்யாறு, அமராவதி, நொய்யாறு, மருதையாறு, வெள்ளாறு போன்ற பெரிய ஆறுகளும் வந்து சேர்கின்றன; சின்னாறு, காட்டாறு, கம்பையாறு, ருத்ராட்ச ஆறு, அரியாறு, கொடிங்கால், வாணியாறு, கோரையாறு, குண்டாறு, அம்புலியாறு, பாம்பாறு போன்ற சிற்றாறுகளும் காவிரியாற்றுடன் கைகோத்து திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கு வளம் சேர்க்கின்றன.



திருவரங்கத்திற்கு அருகே காவிரியாறு இரண்டாகப் பிரிந்து - சிறிது தூரம் சென்று கிழக்கே கூடும்.

முக்கொம்பு என்ற இடத்தில் காவிரியாற்றிலிருந்து கொள்ளிடம் தனியே பிரிகிறது. கிளை நதிகளில் குறிப்பிடத்தக்கது உய்யக்கொண்டான் ஆறு. இதன் மூலமே திருச்சிராப்பள்ளி நகருக்குள் உள்ள குளங்களும் சுற்றுப்புறங்களும் பெரும்பயன் பெறுகின்றன.

ஆறு மட்டுமன்றி - ஓமந்தூர் ஏரி, புத்தூர் ஏரி, அக்ரகாரத்து ஏரி போன்ற பல ஏரிகளும், குளங்களும் - திருச்சிராப்பள்ளி மாவட்ட விவசாயம் செழிக்க உறுதுணை புரிகின்றன.

**கி.ஆ.பெ. நூற்றாண்டு–நவம்பர் 11**



# முத்தமிழ்க் காவலர்

'முகம்' மாமணி

'கே.ஏ.பி.' என்று நீதிக் கட்சிக்காரர்களாலும் 'கி.ஆ.பெ.' என்று சுயமரியாதை இயக்கத்தவராலும் 'விசுவநாதம்' என்று திருச்சிராப்பள்ளி மக்களாலும் 'திருச்சி விசுவநாதம்' என்று தமிழ் அறிஞர்களாலும் 'முத்தமிழ்க் காவலர்' என்று தமிழ் மக்களாலும் அழைக்கப்பட்டவர், இவர்.

1899ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 10ஆம் நாள் திருச்சியில் பிறந்தார். பெற்றோர்: பெரியண்ணப் பிள்ளை - சுப்பம்மாள். இவர் தம் பெற்றோருக்கு 16வது கடைக்குட்டி பிள்ளையாவார்.

1904-ஆம் ஆண்டு முத்துச்சாமிக் கோனாரிடம் மணலில் தமிழ் எழுத்துக்களை எழுதும் பயிற்சி பெற்றார். முறையாக எந்தப் பள்ளிக்கூடத்திலும் இவர் சேர்ந்து படிக்கவில்லை. தாமாக முயன்றே தமிழ் இலக்கியங்களைக் கற்றுப் புலமை பெற்றார்.

எந்தப் பள்ளியிலும் படிக்காத ஒருவரை இரண்டு பல்கலைக்கழகங்கள் ஆட்சிக்குழு உறுப்பினராக ஏற்றுக் கொண்டதோடு 'டாக்டர்' பட்டமும் வழங்கிச் சிறப்பித்தன. இத்தகைய பெருமைபெற்ற ஒருவர் இந்தியாவிலேயே இவர் ஒருவராகத்தான் இருக்கவேண்டும்!

### முதல் சொற்பொழிவு

இளமையிலேயே சைவப் பற்றும் தமிழ்ப் பற்றும் கொண்டிருந்த விசுவநாதம் 22ஆம் வயதில் ஒட்டப்பிடாரத்தில் வ.உ.சி. முன்னிலையில் 'அன்பு' என்ற தலைப்பில் தன் கன்னிப்பேச்சைத் தொடங்கினார். அன்றிலிருந்து தம் 96-ஆம் வயது வரை சுமார் முக்கால் நூற்றாண்டுக்காலம் தமிழுக்காக - தமிழ் மக்களுக்காகப் பேசியும் எழுதியும் பாடுபட்டு வந்தார்.

ஜெர்மன் நாட்டு பெர்லின் நகரத்துக்குத் தமிழ் உலா சென்று வந்தது தமிழ் வரலாறு கண்டறியாத சிறப்பாகும்.

### நீதிக் கட்சியில்

விசுவநாதம், அன்று ஆண்ட கட்சியான ஜஸ்டிஸ் கட்சியின் நான்கு மாநிலங்களை உள்ளடக்கிய சென்னை மாகாணத்தின் பொதுச் செயலாளராக இரண்டுமுறை தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அன்று ஆங்கில மருத்துவப் படிப்புக்கு (எம்.பி.பி.எஸ்) சமஸ்கிருத அறிவு இருந்தவர்கள் மட்டுமே அனுமதிக்கப் பட்டனர். ஆனால், விசுவநாதத்தின் முயற்சியால்,

1. தமிழ் படித்தவர்களும் அனுமதிக்கப்பட்டனர்.
2. இவர் காலத்தில்தான் தீண்டாமை ஒழிப்புச் சட்டம் இயற்றப்பட்டது.
3. வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் கொண்டு வரப்பட்டது.
4. கோவில் சொத்துக்களைக் கண்காணிக்க அறநிலையத்துறை தோற்றுவிக்கப்பட்டது.

### அரசியலில் அண்ணா

திருச்சியில் நடந்த ஜஸ்டிஸ் கட்சி மாநாட்டில், தலைவர் சர்.ஏ.இராமசாமி முதலியாரின் ஆங்கிலப் பேச்சைத் தமிழில் மொழிபெயர்த்துக்கூற அண்ணாவை அறிமுகப்படுத்தினார் விசுவநாதம். அறிஞர் அண்ணாவின் அரசியல் பிரவேசம் அன்றிலிருந்து தான் தொடங்கியது.

தந்தை பெரியார் அவர்கள், காங்கிரஸ் கட்சியை விட்டு விலகியபோது, அவரை ஜஸ்டிஸ் கட்சிக்கு வரவேற்றார் விசுவநாதம். ஆனால் சுயமரியாதை இயக்கத்தில் சேர்ந்து பாடுபட விசுவநாதத்தைப் பெரியார் ஈர்த்துவிட்டார். இருவரும் சேர்ந்து பதினாறு ஆண்டு

காலம் தமிழகத்தின் மூலை முடுக்கெல்லாம் பிரசாரம் செய்து சுயமரியாதை இயக்கக் கருத்துக்களான ஜாதி-மத வேற்றுமைகளை அகற்றுதல், பெண் சமத்துவம், தீண்டாமை ஒழிப்பு, அறியாமை-மூடநம்பிக்கை எதிர்ப்பு, கல்வயின் அவசியம் பற்றிய கருத்துக்களைப் பரப்பினர்.

### இந்தித் திணிப்பு எதிர்ப்பு

1938-ஆம் ஆண்டு, தமிழ்நாட்டுப் பள்ளிகளில் இந்தியைக் கட்டாயப் பாடமாக இராஜாஜியை முதலமைச்சராகக் கொண்ட காங்கிரஸ் ஆட்சியாளர் திணித்தபோது அதைக் கடுமையாக எதிர்த்து பெரியாரும், விசுவநாதமும் மாபெரும் இயக்கத்தை உருவாக்கினர். அண்ணா உள்பட பல தமிழறிஞர்கள் அந்த இயக்கத்தில் பங்குகொண்டு போராடியதன் விளைவாக இந்தித் திணிப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது.

தமிழ்நாட்டு இசை மேடைகளில் பிற மொழிப் பாடல்களே பாடப்பட்டு வந்ததை எதிர்த்து - சர் அண்ணாமலை அரசரும், சர் ஆர்.கே.சண்முகமும் தோற்றுவித்த தமிழிசை இயக்கத்தைத் தமிழ்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் பரப்பிய பெருமை விசுவநாதத்துக்கு உண்டு.

திரு. கி.ஆ.பெ. விசுவநாதத்தைப் பற்றி 'கல்கி' ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் கூறுகிறார் : "கும்பகோணம்



முத்தமிழ்க் காவலரின் 90 வயது துணைவியார் திருமதி. சுப்புலட்சுமி அம்மையார்- மகன்கள் சிவராமன், ராஜாராம், கதிரேசன் மூவரில், பின் இருவர்.

தமிழிசை மாநாட்டில் பேசியவர்களுள் திருச்சி விசுவநாதம் அவர்களின் பேச்சுதான் காரசாரமாக இருந்தது.

தமிழிசைக்குக் கூறப்படும் எதிர்ப்புகளையெல்லாம் அவர், ஒவ்வொன்றாகத் தம் முன்னே நிறுத்தி கன்னத்தில் அறை கொடுத்து அனுப்பினார்.

'எந்த இயக்கம் வளர வேண்டுமானாலும் எதிர்ப்பு அவசியம். தமிழ் இசை இயக்கத்துக்கு இதுவரை உள்ள எதிர்ப்பு போதாது. இன்னும் எதிர்ப்பை வரவேற்கிறேன். எங்கே இன்னும் கொஞ்சம் எதிர்ப்பு, எங்கே இன்னும் கொஞ்சம் எதிர்ப்பு' என்று ஆவலாகக் கேட்டார் விசுவநாதம். ஆனால் அவர் வரவேற்பை ஏற்றுக்கொள்ள மாநாட்டில் யாரும் தயாராக இருந்ததாகத் தெரியவில்லை!"

### திருக்குறள் இயக்கம்

நாளடைவில் அரசியலிலிருந்து ஒதுங்கிய விசுவநாதம் ஜாதி-மத பேதமற்ற சமத்துவச் சமுதாயத்தை உருவாக்கத் திருவள்ளுவரின் திருக்குறள் நெறியைப் பரப்புவதையே தம் வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு, திருக்குறளைப் பரப்பி வந்தார்.

திருவள்ளுவருக்கு ஒரு கோட்டம் கட்டவேண்டும்; தைப்பொங்கலின் அடுத்த நாளைத் திருவள்ளுவர் நாளாகக் கொண்டாட வேண்டும், விடுமுறை விடவேண்டும், திருவள்ளுவர் ஆண்டை நடைமுறைப் படுத்த வேண்டும், குறள் பரப்பும் சான்றோர்களுக்குத் திருவள்ளுவர் பெயரால் விருது வழங்கவேண்டும் என்னும் விசுவநாதத்தின் வேண்டுகோளை மாண்புமிகு தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஏற்றுக்கொண்டு, அவற்றையெல்லாம் நிறைவேற்றி வரலாறு படைத்தார்.

### தமிழ் இயக்கம்

**பேரறிஞர் அண்ணா** அவர்கள் தமிழக முதல்வராக இருந்து 1968-ல் நடத்திய இரண்டாம் உலகத் தமிழ் மாநாட்டு ஏற்பாட்டுக் குழுவின் துணைத் தலைவராகப் பொறுப்பேற்று, மாநாடு வெற்றி பெறத் துணை நின்றவர்.

இந்திய மொழிகளிலேயே தொன்மையான தமிழுக்கென்று ஒரு பல்கலைக்கழகத்தை நிறுவ வேண்டும் என்ற விசுவநாதத்தின் கோரிக்கையை அப்போது முதல்வராக இருந்த திருமிகு எம்.ஜி.ஆர். அவர்கள், ஏற்றுக்கொண்டு தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தை நிறுவினார்.

உயிரோடிருந்த போதே 'நந்தவனம்' என்ற பெயரில் -தனக்காகவும், தன் மனைவிக்காகவும் கி.ஆ.பெ. அவர்கள் கட்டிவைத்த கல்லறை.



இருக்கவேண்டுமென்று தலைநகர்த் தமிழ்ச் சங்கம் நடத்திய கிளர்ச்சிக்குத் தலைமை தாங்கிச் சென்றதால் சிறை பிடிக்கப்பட்டார் விசுவநாதம். தாய் மொழிக்கான போராட்டத்தில் 94 வயதில் சிறை சென்றவர் உலகத்திலேயே இவர் ஒருவராகத்தான் இருக்க வேண்டும்.

### நல்ல குடும்பம்

முத்தமிழ்க் காவலர் தம் தமக்கையாரின் மகள் சுப்புலட்சுமி அம்மையாரை 1929ஆம் ஆண்டில் மணந்தார். இவர்களுக்கு 6 பெண்களும், 4 ஆண்களும் மணந்து மக்களைப் பெற்று வாழ்ந்து வருகின்றனர்.

தமிழர் உண்ணும் உணவுப் பொருள்களே மருந்தாகப் பயன்படுபவை. சித்த மருத்துவம் என்று தோன்றியதென்று சொல்லமுடியாத காலத்தில் தோன்றியது. சித்தர்கள் அதைப் போற்றி வளர்த்தார்கள். அந்தச் சித்த மருத்துவத்துக்கு ஒரு வாரியம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கையை ஏற்று முதல்வர் எம்.ஜி.ஆர் அவர்கள் சித்த மருத்துவ வாரியத்தை அமைத்து அதற்கு விசுவநாதத்தையே இயக்குநராக நியமித்தார்.

பொதுவாக மக்கள் தம் பெற்றோரின் அறுபதாம் ஆண்டு மணி விழாவிற்கு "எம் தந்தையாரின் மணிவிழாவிற்கு வருகை தந்து சிறப்பிக்கவும்" என்று அழைப்பதுதான் நடைமுறையில் காண்பது. ஆனால் கி.ஆ.பெ.வி.யும் சுப்புலட்சுமி அம்மையாரும் "என் மகனுக்கு மணி விழா! வருகை தந்து வாழ்த்தியருளவும்" என்று அழைப்பு விடுத்து மூன்று மகன்களுக்கு மணிவிழா கண்ட இப் பெருமக்கள் நூற்றாண்டு விழாவையும் காணத் தமிழன்னையை வேண்டுகிறோம்.

### குடியரசுத் தலைவர் பாராட்டு

திரு. விசுவநாதத்தின் பன்முகத் தொண்டைப் பாராட்டும் வகையில் அவருடைய 96ஆம் ஆண்டு பிறந்தநாளில் முன்னாள் குடியரசுத் தலைவர் திரு. ஆர்.வி. அவர்கள் விசுவநாதத்தைப் பாராட்டிப் பொற்கிழி வழங்கிச் சிறப்பித்தார்.

### 94 வயதிலும் தமிழுக்காகச் சிறை

தமிழ்நாட்டில் தமிழ்தான் ஆட்சி மொழியாக இருக்கவேண்டும், பள்ளிகளில் தமிழ்தான் பயிற்சி மொழியாக



கி.ஆ.பெ. விசுவநாதம் அரசு மருத்துவக் கல்லூரி

தமிழகத்தின் சிறந்த பேச்சாளர்களில் ஒருவராவார், இவர்.

பேச்சும், எழுத்தும் கைவரப் பெற்றவர்கள் ஒரு சிலரே. அவர்களுள் அய்யா கி.ஆ.பெ.வி. ஒருவராவார்.

இதுவரை 25 நூல்கள் வெளி வந்துள்ளன. அவற்றுள் சில இருபது பதிப்புகளுக்கு மேல் வெளிவந்துள்ளன. இவருடைய நூல்கள் கடல் கடந்த நாடுகளுக்கும் செல்கின்றன.

**பத்திரிகையாளர்**

1925ஆம் ஆண்டு தந்தை பெரியார் தொடங்கிய 'குடி அரசு' வார ஏட்டில் துணை ஆசிரியராகவும், பிறகு பெரியாரின் 'விடுதலை' நாளேட்டில் 1938ல் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார். பிறகு 1947ஆம் ஆண்டு 'தமிழர் நாடு' ஏட்டைத் தொடங்கி அதன் ஆசிரியராகவும் இருந்திருக்கிறார்.

இவருடைய எழுத்தும் பேச்சும் இன்னும் பல நூல்களாக வர வேண்டியிருக்கின்றன.

**அந்த நாள் முதல்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம் பழங்காலத்திலிருந்து பல்வேறு பேரரசர்களும் தடம்பதித்த மாவட்டம் ஆகும்.

சேர, சோழ, பாண்டியர்களாம் மூவேந்தர்கள், விஜய நகரப் பேரரசர்கள், பல்லவர்கள், கர்நாடக நவாபுகள், ஆங்கிலேயர்கள், பிரஞ்சுக்காரர்களெல்லாம் தமது ஆட்சியின் நிழலில் இம்மாவட்டத்தை வைத்திருந்தது உண்டு.

எனினும், சோழப் பேரரசர்கள் ஆட்சிக் காலத்திலேயே இந்த மாவட்டம் எல்லா வகையிலும் ஏற்றம் பெறலாயிற்று!

திருச்சிராப்பள்ளி – மலைக்கோட்டையில் உள்ள குகையில் பல்லவர் காலக் கல்வெட்டுகள் காணப் படுகின்றன; இந்த ஊரின் பெயர் 'சிராப்பள்ளி' என்று அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

விஜய நகரப் பேரரசர்கள் ஆட்சியின்போதே, இதைத் 'திருச்சிராப்பள்ளி' என்றே குறிப்பிடப் பட்டதாகக் கல்வெட்டுச் சான்றுஉள்ளது.

**குறள் நெறி**

உலகோர்க்கெல்லாம் பொது மறையாகத் திகழக் கூடிய திருக்குறளைக் கடந்த அரை நூற்றாண்டு காலமாக, தம் பேச்சாலும், எழுத்தாலும் நாடு நகரமெங்கும் பரப்பிவருகிறார். இந்தப் பணியின் காரணமாக நாடெங்கும் பல திருக்குறள் அமைப்புகள் தோன்றியுள்ளன.

கலைஞர் முன்பு முதலமைச்சராக இருந்தபோது தமிழக அரசும் குறள் நெறி பரப்பும் மையத்தையும் அமைத்து இவருக்கு 'திருவள்ளுவர் விருது' வழங்கியது குறிப்பிடத்தக்கது.

1994ஆம் ஆண்டு தம் 96ஆம் அகவையில் நோய்வாய்ப்பட்டு மருத்துவமனையில் மரணப் படுக்கையில் இருந்தபோதும், கடைசி இரண்டு நாட்களில் அவரைப் பார்க்க வந்த அப்போதைய அமைச்சர்களான திரு. எஸ்.டி.எஸ்., திரு. ஆர்.எம்.வீ. அவர்களிடமும் **''தமிழ்நாட்டில் தமிழ்தான் ஆட்சிமொழி. பள்ளிகளில் தமிழ்தான் பயிற்று மொழி – என்னும் ஆணை வந்தால், அதைக் கேட்டுவிட்டு மகிழ்ச்சியோடு சாவேன்!''** என்றார்.

இரண்டாம் நாள் அவர்கள் வந்தபோது, ''அரசு ஆணை இன்று வந்து விடுமா? நாளையாவது வருமா?'' என்று கேட்டுக் கொண்டே உயிர் விட்டவர் (19-12-1994) 'முத்தமிழ்க் காவலர்' கி.ஆ.பெ. விசுவநாதம்!

காலமெல்லாம் தமிழ்த் தொண்டாற்றிய
'முத்தமிழ்க் காவலர்' கி.ஆ.பெ. அவர்களின்
நினைவினைப் போற்றிடும் வகையில்,
முதல்வர் கலைஞர் அவர்களால்
திருச்சியில் புதிதாக மருத்துவக் கல்லூரியினைத்
தோற்றுவித்து, அதற்கு கி.ஆ.பெ.விசுவநாதம்
அவர்களின் பெயர் சூட்டப்பட்டுள்ளது.
மேலும், தான் சாகும் வரையில்,
தமிழைப் பயிற்று மொழியாக, அரசு அறிவிக்க
வேண்டுமென்ற கி.ஆ.பெ.விசுவநாதம் அவர்களின்
பேரவா, முதல்வர் கலைஞரால் மழலையர்
பள்ளியிலிருந்து இனி தமிழ்தான் பயிற்று மொழி என,
அண்மையில் ஆணையிடப்பட்டுள்ளது,
சிறப்புக்குரியதன்றோ?



சமயபுரம் மாரியம்மன் கோயில் தேரோட்டம்

# அறநிலையத் துறையின் பணிகள்



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில், அறநிலையத் துறையின் பணிகள் செம்மையுற நடைபெற்று வருகின்றன. இந்த மாவட்டம், கோயில் ஏராளம் உள்ள மாவட்டம் ஆகும்.

கிராமப்புறத் திருக்கோயில்களில் ஓய்வுபெற்ற பூசாரிகளுக்கு மாதம் ரூ.500 வீதம் ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின் கீழ், திருச்சி மாவட்டத்தில் 11 நபர்களுக்கு மாதம் 1க்கு ரூ.500 வீதம் ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது.

ஓய்வுபெற்ற திருக்கோயில்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம் வழங்கும் திட்டத்தின்கீழ் அர்ச்சகர்கள், இசைக் கலைஞர்கள், ஓதுவார்கள், வேதபாராயணர் ஆகிய 65 பேர்களுக்கு மாதம் ரூ.500 வீதம் ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது.

## குடும்ப நலநிதி

திருக்கோயில் பணியாளர்கள் பணியில் இருக்கும்போது இறக்க நேரிட்டால், இறந்தவரது குடும்பத்திற்கு நிதிஉதவி வழங்கும் திட்டத்தின் கீழ், 1997–98ஆம் ஆண்டு இரண்டு நபர்களின் குடும்பங்களுக்குக் குடும்ப நலநிதியாக ரூ.30,000 வழங்கப்பட்டுள்ளது. இவ்வாண்டில் ஐந்து குடும்பங்களுக்கு ரூ.1,50,000 வழங்கப்பட்டுள்ளது.

## பணியாளர்களுக்குச் சம்பள பாக்கி

71 திருக்கோயில்களில் 112 பணியாளர்களுக்குச் சம்பள பாக்கியாக இருந்த ரூ.2,52,943 அரசு நிதியிலிருந்து வழங்கப்பட்டுள்ளது; இவ்வகையில் அப்பணியாளர்கள் **கலைஞர்** அரசை வாழ்த்தி மகிழ்ந்த வண்ணமுள்ளனர்.

## ஒருகால பூஜை நிதிஉதவி

திருச்சி மாவட்டத்தில் 1997–98க்கு 43 திருக்கோயில்களுக்கும், 1998–99ல் 15 திருக்கோயில்களுக்கும் தலா ரூ.25,000 வீதம் அரசு நிதியிலிருந்து ஒருகால பூஜைக்கு நிதிஉதவி வழங்கப்பட்டது. அத்தொகையை வங்கியில் முதலீடு செய்து அதிலிருந்து கிடைக்கும் வட்டியைக்கொண்டு ஒருகால பூஜை அக்கோயில்களில் நடைபெற்று வருகிறது.

## திருப்பணி வேலைகள்

1997–98ம் நிதியாண்டிற்கு அரசு நிதியிலிருந்து திருக்கோயில்களின் திருப்பணிக்கு நிதி வழங்கப்பட்ட விவரம் வருமாறு:

அரசு மானியமாக இரண்டு திருக்கோயில்களுக்கு ரூ.3.20 இலட்சமும், ஆணையர் பொது நல நிதியிலிருந்து ஒரு திருக்கோயிலுக்கு ரூ.60,000மும் வழங்கப்பட்டிருக்கிறது. அக்கோயில்கள் இதனால் புதுப்பொலிவு பெற்றுவருகின்றன.



திருவானைக்கா கோயில் பிரகாரம்

### கிராமப்புறத் திருப்பணி

இதுவரை கிராமப்புறத் திருப்பணி திட்டத்தின்கீழ் 94 திருக்கோயில்களுக்கு ரூ.23,50,000 வழங்கப்பட்டுத் திருப்பணி நடைபெற்று வருகிறது.

இதில் 9 திருக்கோயில்களின் பணி நிறை வடைந்துள்ளது. அதேபோல் மற்ற கோயில்களின் திருப்பணி வேலைகளும் விரைவுபடுத்தப்பட்டுள்ளன.

மணப்பாறை வட்டம், அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில் மற்றும் துவரங்குறிச்சி அருள்மிகு பூதநாயகியம்மன் திருக்கோயில் சார்பாகப் புதிதாக இரண்டு சேவார்த்திகள் மண்டபங்கள் கட்டுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டு, கட்டுமானப் பணிகள் நடைபெற்று வருகிறது.

### கும்பாபிஷேகம்

1998–ஆம் ஆண்டு திருச்சி இணை ஆணையர் சரகத்தில் (கரூர், பெரம்பலூர்) 50 திருக்கோயில்களில் குடமுழுக்கு நடத்திட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

விராலிமலை அருள்மிகு சுப்பிரமணியசுவாமி திருக்கோயிலில் ரூ.6 இலட்சத்திற்குத் திருக்கோயில் பராமரிப்புத் தொடர்பான வேலைகள் நடைபெற்று வருகிறது.

### திருக்கோயில்களில் தமிழ்ப் புலவர்கள் நியமனம்

திருக்கோயில்களில் தமிழ் மொழியினைத் தொல் பழங்காலம் போல் அந்தஸ்தினை உயர்த்தும்



வயலூர் முருகன் கோயில் கோபுரம்

பொருட்டு, 13 திருக்கோயில்களில் 15 தமிழ்ப் புலவர்கள் நியமனம் செய்யப்பட்டுப் பணிபுரிந்து வருகின்றனர். இதன் மூலம் 'தமிழிலும் அர்ச்சனை' செய்யப்படும் என்ற நிலை நாளடைவில் மாறி – 'தமிழில் அர்ச்சனை' செய்யப்படும் என்கிற நிலை நிரந்தரமாக உருவாக்கப்படும்.

**தொடர் சொற்பொழிவுகள்**

பொங்கல் விழாவினை முன்னிட்டு, சைவ மற்றும் வைணவ சமயங்களின் பெருமைகளை உயர்த்தும்பொருட்டு 88 புலவர்களைக்கொண்டு 13 நாட்கள் திருக்கோயில்களில் தொடர் சொற்பொழிவுகள் நடத்தப்பட்டன.

**தல புராணங்கள்**

திருச்சிராப்பள்ளி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலில் "செவ்வந்திப் புராணம்" எளிய நடையில் சீர்பிரித்துப் பாமரர்களும் புரிந்துகொள்ளும் வண்ணம் உரைநடையுடன் வெளியிடப்பட்டுள்ளது.

மேலும், 15 திருக்கோயில்களில், தல புராணங்கள் வெளியிடத்தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன.

**கோடைகாலப் பயிற்சி வகுப்பு**

சைவம் மற்றும் வைணவம் ஆகிய இரு பிரிவிற்கும் சமயப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பட்டன. கோடைகாலப் புத்தொளி பயிற்சி வகுப்பு, திருச்சியில் உள்ள அருள்மிகு தாயுமானசாமி திருக்கோயில் மற்றும் திருவானைக்கோயில் அருள்மிகு அகிலாண்டேஸ்வரியம்மன் திருக்கோயிலிலும் நடைபெற்றது.

சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் 26.5.97 முதல் திருமுறைப் பயிற்சிப் பள்ளி துவக்கப் பட்டது; இப்பள்ளியில் 20 மாணவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**கருணை இல்லங்கள்**

திருச்சி மாவட்டத்தில் சமயபுரம் மற்றும் குமாரவயலூர் ஆகிய திருக்கோயில்களில் நடைபெற்று வந்த கருணை இல்லங்கள் மட்டுமன்றி– புதிதாக உறையூர், பாண்டமங்கலம், அருள்மிகு வெக்காளியம்மன் திருக்கோயில் மற்றும் மலைக் கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக் கோயிலில் 3.6.97 முதல் கருணை இல்லங்கள் புதிதாகத் துவங்கப்பட்டு, செயல்பட்டு வருகிறது.

மொத்தம் 95 சிறுவர்களும் 25 சிறுமியர்களும் இவ்வில்லங்களில் தங்கி, உணவு, உடை பெற்று, கல்வி கற்று வருகின்றனர். சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலில் சிறுவர்களுக்காகக் கருணை இல்லம் நடத்தப்பட்டு வருகிறது. இதில் 97 மாணவர்கள் தங்கிப் பயின்றுவருகின்றனர்.

3.6.97ல் புதிதாகச் சிறுமியர்களுக்காக ஒரு கருணை இல்லம் துவக்கப்பட்டுள்ளது. இதில் 2 சிறுமி யர்கள் பயின்றுவருகின்றனர்.

**நாதஸ்வரம் மற்றும் தவில் பயிற்சி**

திருச்சி வட்டம், திருவானைக்கோயில் அருள்மிகு அகிலாண்டேஸ்வரியம்மன் திருக்கோயிலில் 3.6.97 முதல் நாதஸ்வரம் மற்றும் தவில் பயிற்சிப்பள்ளி துவங்கப்பட்டு நடைபெற்று வருகிறது.

இதில் 10 மாணவர்கள் நாதஸ்வரமும், 5 மாணவர்கள் தவிலும் பயின்று வருகிறார்கள். மூன்றாண்டு காலப் பயிற்சி வகுப்பு நடத்தப்பட்டு வருகிறது.

**இலவசத் திருமணத் திட்டம்**

திருக்கோயில் சார்பாகச் சமுதாயத்தில் நலிவுற்ற நிலையிலுள்ள குடும்பத்தைச்

**கோயில் நகரம்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், தஞ்சாவூருக்கு அடுத்தபடியாகத் திருக்கோயில்கள் மிகுந்துள்ள மாவட்டம் ஆகும்; மாவட்டம் முழுதுமே ஆங்காங்கு கோயில் கோபுரங்கள் நிமிர்ந்து நிற்பதை காணலாம். சைவமும், வைணவமும் அந்நாளில் இங்கே இரட்டைக்குழந்தைகளாக வளர்க்கப்பட்டுள்ளன!

## திருச்சி மலைக்கோட்டை

*திருச்சி மலைக்கோட்டை சுமார் 300 அடி உயரம் உடையதாகும்; இதில் உள்ள 400க்கும் மேலான படிகளில் ஏறி உயரே சென்றால் உச்சிப் பிள்ளையார் காட்சி தருவார்.*

*16ஆம் நூற்றாண்டு தொடக்கத்தில், விசுவநாத நாய்க்கரால் கொத்தளங்கள் அமைத்து பலப்படுத்தப்பட்டது இந்த மலைக்கோட்டை.*

*மலைச் சரிவில் பல்லவன் மகேந்திரவர்மன் காலக் குகைக் கோயிலும் சிற்பங்களும் உண்டு.*



திருச்சி உச்சிப்பிள்ளையார் கோயில்

*இந்த மலைக் கோட்டையின் உச்சியில் நின்று பார்த்தால் தஞ்சாவூர்ப் பெரிய கோயில் தெரிகிறது!*

*திருச்சிராப்பள்ளி தெப்பக்குளம் 100 அடி அகலமும், 125 அடி நீளமும் கொண்டதாகும்!*

சார்ந்தவர்களுக்கான, இலவசத் திருமணத் திட்டத்தின் கீழ், 12–5–97ல் சமயபுரம் அருள்மிகு மாரியம்மன் திருக்கோயிலின் சார்பில், இணைக்கு ரூ.3,000 எனும் செலவில் 65 இணைகளுக்கு இலவசமாகத் திருமணங்கள் செய்துவைக்கப்பட்டன.

**கோடி அர்ச்சனை**

திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமான சுவாமி திருக்கோயிலில் தமிழில் ஏகதின லட்சார்ச்சனை செய்யப்பட்டது. தமிழில் 3.6.97 முதல் கோடி அர்ச்சனை தொடங்கப்பட்டு, தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தமிழில், சமயபுரம் மற்றும் ஸ்ரீரங்கம் திருக்கோயில்களில் ஏகதின லட்சார்ச்சனை செய்யப்பட்டது.

**திருக்கோயில் சொத்துக்கள் மீட்கப்பட்ட விவரம்**

திருச்சி மலைக்கோட்டை அருள்மிகு தாயுமானசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான திருச்சி நகரின் மையப் பகுதியில் உள்ளதும், கடந்த 15 ஆண்டுகளாக எவ்வித வருமானமும் இல்லாமல் இருந்ததும், நெடுநாட்களாக வழக்கிற்குட்பட்டு இருந்ததுமான அடித்தளம் மற்றும் மேல்தளம் சுமார் 13,250 சதுரஅடி உள்ள கட்டடம் ஒன்று மீட்கப்பட்டது. இதன் தற்கால மதிப்பு சுமார் ரூ.1 கோடி ஆகும் என்பது குறிப்பிடத்தக்கது.

முதல்வர் கலைஞர் ஆணையில், பழுதடைந்துள்ள திருவரங்கம், திருக்கோயில் மதில் சுவர்கள் ரூ.8 இலட்சம் மதிப்பீட்டில் விரைந்து செப்பனிடப் படுகின்றன.

– க. இராஜநாயகம்
இணை ஆணையர்,
இந்து சமய அறநிலையத்துறை.

# திருச்சியில் பால் உற்பத்தி

திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், கரூர் ஆகிய 3 மாவட்டங்களை உள்ளடக்கிய திருச்சி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியத்தில் 42 பால்வழித் தடங்கள் உள்ளன; இவற்றின் மூலம் 523 சங்கங்களிலிருந்து நாள் ஒன்றுக்குச் சராசரியாக 1.74 இலட்சம் லிட்டர் பால் கொள்முதல் செய்யப்படுகிறது.

பால் விற்பனை நாளொன்றுக்கு 83,000 லிட்டர் செய்யப்பட்டு வருகிறது. வெகுவிரைவில் பெரம்பலூர், அரியலூர், மணப்பாறை போன்ற ஊர்களிலும் ஆவின் பாக்கெட் பால் விற்பனை அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

அபரிமிதமான பால் உற்பத்தியை கருத்தில் கொண்டு, இந்த ஒன்றியம் 1.9.98 முதல் ரொக்க விற்பனைக்கும் 16.9.98 முதல் கார்டு பால் விற்பனைக்கும் 4.5% கொழுப்புச்சத்து, 8.5% இதரச் சத்துகள் அடங்கிய நிலைப்படுத்தப்பட்ட பால் விற்பனை செய்கிறது.

மேலும் நடப்பு ஆண்டில் 40 புதிய பால் உற்பத்தியாளர் சங்கங்கள் ஆரம்பிக்கக் குறியீடு நிர்ணயிக்கப்பட்டு இதுவரை 27 புதிய பால் உற்பத்தியாளர்கள் சங்கங்கள் இப்பகுதியில் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்டக் கூட்டுறவுப் பால் உற்பத்தியாளர்கள் ஒன்றியம் 1997–98ஆம் ஆண்டில் ரூ.52 இலட்சம் நிகர இலாபம் ஈட்டியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. நடப்பு ஆண்டில் (1998–99) செப்டம்பர் '98 முடிய ஆறு மாதங்களில் ரூ.43.91 இலட்சம் நிகர லாபம் ஈட்டியுள்ளது.

மணப்பாறையில் பொதுமக்களால் நன்கொடையாக அளிக்கப்பட்ட 3.5 ஏக்கர் நிலத்தில் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து ரூ.10 இலட்சம் நிதி உதவி பெற்று, ஒரு நாளைக்கு 30,000 லிட்டர் திறன் கொண்ட புதிய பால் குளிரூட்டும் நிலையம் ரூ.25 இலட்சம் செலவில் அமைக்கப்பட்டு வருகிறது.

கிராமப்புற ஏழை ஆதிதிராவிட பால் உற்பத்தியாளர்களெல்லாம் பயன்பெறும் வகையில் மானியத் துடனான கறவை மாட்டுக்கடன் வழங்கப்பட்டு, ஒன்றியத்திற்கு மானியத்தொகை ரூ.3,000 வீதம் வழங்கப்பட்டு வருகிறது. நடப்பு நிதியாண்டில் ஆதிதிராவிட நலத்திட்டத்தின்கீழ் 300 கறவை மாடுகள் இவ்வொன்றியத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் 'தாட்கோ' திட்டத்தின் மூலமாகவும் மானியத்துடனான கறவை மாட்டுக் கடன் 1100 ஆதிதிராவிட உறுப்பினர்களுக்கு வழங்கப்படவுள்ளது.

இவ்வாறான நல்ல பல திட்டங்களின் மூலம் பெறப்படும் கறவை மாடுகள் ஈன்றெடுக்கும் கன்றுகளுக்கு 'தாட்கோ' கன்று வளர்ப்புத் திட்டத்தின் மூலம் கன்று ஒன்றுக்கு ரூ.10.680 வீதம் இலவசக் கன்று தீவனம், மருத்துவ வசதி, ஆயுள் காப்பீடு ஆகியவை வழங்கப்பட்டு வருகிறது. 1995–96ஆம் ஆண்டில் 125 கன்றுகளும் 1996–97ஆம் ஆண்டில் 100 கன்றுகளும் தேர்வு செய்யப்பட்டு, இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

தற்சமயம் 7 நடமாடும் கால்நடை மருத்துவத் தடங்கள் மூலம் சங்கங்களில் பிரதிமாதமும் 3,966 கால்நடைகளுக்கு மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படுகிறது.

மேலும், 163 செயற்கை முறை கருவூட்டல் மையங்கள் மூலமாக மாதந்தோறும் சராசரியாக 6,500 செயற்கை முறை கருவூட்டல் செய்யப்படுகிறது.

அரசு அறிவித்துள்ள விலை நிர்ணயத்தில் இவ்வொன்றியம் பால் உற்பத்தியாளர்களிடமிருந்து கொள்முதல் செய்து வருகிறது. மாதம் ஒன்றிற்கு சராசரியாக ரூ.5 கோடி அளவிற்குப் பால் கொள்முதல் பணம், பால் உற்பத்தியாளர்களுக்குத் தாமதமின்றி பட்டுவாடாச் செய்யப்படுகிறது. இதனால், விவசாயிகள் பால் உற்பத்தியைப் பெருக்கிட அதிக ஆர்வம் காட்டுகிறார்கள். ★



# குழந்தைத் தொழிலாளர் சீரமைப்பு (சியர்ஸ்)



குழந்தைத் தொழிலாளர் பள்ளியில் பயின்ற மாணவர்களை முறையாகப் பள்ளியில் சேர்த்து அவர்களுக்குப் புத்தகங்கள், நோட்டுகள் மற்றும் பரிசுகள் வழங்குதல். நாள் : 4-7-98.

திருச்சிராப்பள்ளி மாவட்டம் குழந்தைத் தொழிலாளர் சீரமைப்புத் திட்டம் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைத் தலைவராகக் கொண்டு இயங்கிவருகிறது. இம்மாவட்டத்தில் 30 சிறப்புப் பள்ளிகள் 1,500 குழந்தைகளைக் கொண்டு, 14 தன்னார்வத் தொண்டு நிறுவனத்தின் மூலம் நடைபெற்று வருகிறது. இந்த அமைப்பு 'சியர்ஸ்' என்றும் அழைக்கப்படுகிறது.

இந்தச் சிறப்புப் பள்ளிகளில் 9 வயது முதல் 14 வயது வரை உள்ள மாணவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து, படிக்க வைத்து வருகின்றனர். அதாவது ஒன்று, இரண்டாம் வகுப்பு படித்து நின்றுவிட்ட மாணவர்களை முதல் நிலை எனவும், மூன்று, நான்காம் வகுப்பு வரை படித்து நின்றுவிட்ட மாணவர்களை இரண்டாம் நிலை எனவும், ஐந்து மற்றும் ஆறாம் வகுப்பு படித்து நின்றுவிட்ட மாணவர்களை மூன்றாம் நிலை எனவும் பிரித்துள்ளனர். முதல்நிலை மற்றும் இரண்டாம் நிலை மாணவர் களுக்குப் பள்ளிசாராக்கல்வி (Non Formal Education) புத்தகங்கள் வழங்கப்பட்டும், மூன்றாம் நிலை மாணவர்களுக்கு முறையான பள்ளியில் பயிற்றுவிக்கும் 5-ஆம் வகுப்புப் பாடப்புத்தகங்களின் பாடத்திட்டப்படி, அப்புத்தகங்கள் வழங்கிக் கற்பிக்கப்படுகிறது.

***சிறப்புப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வரும் சலுகைகள்:***

★ இலவசக் கல்வி.

★ தினமும் மதிய உணவு, மாதம் இரண்டு முறை முட்டை.

★ இவசத் தட்டு, டம்ளர்.

★ இலவச நோட்டுகள், புத்தகங்கள், சிலேட்டுகள்

★ மூன்று மாதத்திற்கு ஒருமுறை மருத்துவ முகாம் நடத்தப்பட்டு மருந்துப் பொருட்கள் வழங்கப் படுகிறது.

★ ஒவ்வொரு மாணவருக்கும் மாதந்தோறும் ஊக்கத் தொகையாக ரூ.100 வழங்கப்பட்டு வருகிறது.

சிறப்புப் பள்ளிகளில் படிக்கும் மாணவர்களில் 1995-96ஆம் ஆண்டு 36 மாணவர்களும்,1996-97 ஆம் ஆண்டு 214 மாணவர்களும், 1997-98 ஆம் ஆண்டு 314 மாணவர்களும் முறையான பள்ளிகளில் சேர்க்கப் பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான புத்தகம், நோட்டு போன்றவைகள் தொண்டு நிறுவனங்களின் மூலமும் 'சியர்ஸ்' மூலமாகவும் வழங்கப்பட்டுள்ளது. 4-7-1998 அன்று மாவட்ட ஆட்சியர் திரு.வை.மூர்த்தி அவர்கள் இவர்களுக்கு மேற்கண்ட பொருட்களை வழங்கினார்.

இச்சிறப்புகள் அனைத்திற்கும் மேலாக உணவகக் குழந்தைத் தொழிலாளர்களுக்கு என ஒரு சிறப்புப் பள்ளி ஆரம்பிக்கப்பட்டு மிகச்சிறந்த முறையில் நடைபெற்று




*சியர்ஸ் அமைப்பைச் சேர்ந்த மாணவிகள் மருத்துவம் - விழிப்புணர்வு முகாம்*

வருகிறது. இதில் 32 மாணவர்கள் பயின்று வருகின்றனர். இப்பள்ளி 30-4-1998 அன்று மாவட்ட ஆட்சியரால் திறந்து வைக்கப்பட்டது.

வானொலியில் பங்கு கொண்டு நாடகம், பாடல்கள் ஆகியவற்றின் மூலம் தங்கள் திறமைகளை வெளி உலகுக்கு அரங்கேற்றியுள்ளனர்.

பெற்றோர்களின் பொருளாதாரம் சீரடையும் வகையில் அவர்களுக்கு ஐ.ஆர்.டி.பி. கடன் வசதிகள் அளிக்கப்பட்டு, பயனடைந்துள்ளனர்.

ஒவ்வொரு பள்ளியிலும் சுயஉதவிக் குழுக்கள் ஆரம்பிக்கப்பட்டு பெற்றோர்கள் அவர்களுடைய பொருளாதாரத் தேவையைத் தாங்களே பூர்த்தி செய்துகொள்ளும் வகையில் சிறப்புப் பள்ளிகளில் 40 சுய உதவிக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதில் 10 குழுக்கள் வங்கிகளில் கணக்கு வைத்துச் சிறப்புற நடைபெற்று வருகிறது.

இந்த ஆண்டிற்கான 'மால்கம் ஆதிசேஷய்யா' விருது இந்தச் 'சியர்ஸ்' அமைப்பிற்குக் கிடைத்துள்ளது.

உழைத்துச் சிவந்த கைகளுக்குப் பேரின்பத்தை அளிக்கக்கூடிய வகையில் காவேரி மகளிர் கல்லூரியில் இம்மாதம் 2-ம் தேதி முதல் 10 மாணவர்களுக்கு இலவசக் கணிப்பொறி (Computer) பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

வருகிற 16-ஆம் தேதி முதல் 21-ஆம் தேதி வரை ஆசிரியர்களுக்குக் 'கற்றலில் இனிமை' என்ற பயிற்சி முகாம் நடைபெற உள்ளது. மேலும் 10-11-1998 அன்று ஒருநாள் கருத்தரங்கம் கலையரங்கத்தில் நடைபெற்றிருக்கிறது. 14-11-1998 அன்று மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற்றுள்ளன. ☐

## அழகிய ரயில் பெட்டி!

*திருச்சிராப்பள்ளியில் - 'பெல்' கனரகத் தொழிற்சாலை, துப்பாக்கி செய்யும் தொழிற்சாலை, ரயில் பெட்டி செய்யும் தொழிற்சாலை ஆகிய பெரிய தொழிற்சாலைகள் பல உள்ளன.*

***அண்மையில் சென்னை - மத்திய ரயில் நிலையத்தில் எல்லா வசதிகளும் பொருந்திய எழில்மிகு ரயில் பெட்டியைத் தயாரிப்பவர்கள் யார்*** *என்பதற்கான ஒரு போட்டி நடைபெற்றது. எல்லா மாநிலத் தயாரிப்புகளும் இதில் இடம் பெற்றன.*

*ஆனால், முதல் பரிசு பெற்றது, மைசூர் சென்ட்ரல் ஒர்க் ஷாப் தயாரித்த ரயில் பெட்டி.*



*திருச்சிராப்பள்ளி பொன்மலை ஒர்க் ஷாப்பில் தயாரித்த 'பொன்னரசி' (Golden Queen) என்ற ரயில் பெட்டிக்கு, அகில இந்திய அளவிலான இரண்டாவது பரிசு கிடைத்தது!*

***– ராஜு***

# அருங்காட்சியகம்

உலகின் மிகப் பெரிய அருங்காட்சியகங்களுள் ஒன்றான சென்னை அரசு அருங்காட்சியகம் நூற்றாண்டு விழாவையும் கண்டு மேலும் வளர்ச்சி பெற்று




வருகிறது; வரலாற்றிலும் பண்பாட்டிலும் மிகப் புறங்காலத்திலிருந்தே சிறப்புற்று விளங்கிய தமிழகத்தில் மாவட்டந்தோறும் அருங்காட்சியகங்கள் அமைப்பது எனத் தமிழக அரசு மேற்கொண்ட கோட்பாட்டின்படி புதுக்கோட்டை, சேலம், மதுரை அருங்காட்சியகங்கள் அமைக்கப்பட்ட பின்பு, 1983ஆம் ஆண்டு திருச்சிராப்பள்ளியில் மாவட்ட அருங்காட்சியகம் அமைக்கப்பட்டது.

சென்னை அருங்காட்சியகத்தைப் போலவே இந்த அருங்காட்சியகமும் ஒரு பலநோக்கு அருங்காட்சியகமாக அமைக்கப்பட்டுள்ளது; இங்கு கற்சிற்பங்கள், படிமச்சிற்பங்கள், மரச்சிற்பங்கள், கல்வெட்டுகள் ஆகியவற்றைக் கொண்ட தொல்பொருளியல் பொருட்களும்; ஆதிமனிதனின் வாழ்க்கைமுறை, கல் ஆயுதங்கள், பழங்குடிப் பண்பாடு, இசைக்கருவிகள், நாட்டுப்புறக் கலைகள், ஆயுதங்கள் ஆகியவற்றைக் கொண்ட மானிடவியல் பொருட்களும்; தொல்லுயிர்க் கல்மாறிகள், கனிமங்கள் போன்றவற்றைக் கொண்ட புவியியல் பொருட்களும் மக்கள் கண்டு களிக்கும்வண்ணம் சிறப்பாகக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

விலங்கியல், தாவரவியல், நாணயவியல் பொருட்களும், அஞ்சல்தலைகள், பாரம்பரிய ஓவியங்கள், வளர்கலை ஓவியங்கள், மக்கற்கலைச் சிற்பங்கள் போன்றவையும் இவ்வருங்காட்சியகத்தில் இடம்பெற்றுள்ளன.

மாவட்டப் பழம் பெருமையையும், தொழிற்சிறப்பையும் விளக்கும் தக்கை வடிவமைப்புகளும், ஒளிப்படங்களும் இங்கே காட்சிக்கு வைக்கப்பட்டுள்ளன. அலங்காரக் கலைப் பொருட்கள் போன்ற புதிய பிரிவுகள் அருங்காட்சியகம் இராணி மங்கம்மாள் மன்றத்தில் விரிவாக அமைக்கப்படும்போது சிறப்புறச் சேர்க்கப்படவுள்ளன.

ஆராய்ச்சி செய்திட முனைவோருக்கும், மாணவர்களுக்கும் ஆதாரங்களைக் கொடுத்து உதவும் பொருட்டு இவ்வருங்காட்சியகத்தில் ஒரு சிறிய குறிப்பு உதவி நூலகமும் இருக்கின்றது.

திங்கள் தோறும் கலை, வரலாறு, அறிவியல் போன்ற துறைகளுள் புலமை மிக்க அறிஞர்களைக் கொண்டு சிறப்புச் சொற்பொழிவுகள் நிகழ்த்தப்படுகின்றன. கல்வி மற்றும் பொது அறிவு தொடர்பான திரைப்படங்களும் அவ்வப்போது இங்கே காண்பிக்கப்படுகின்றன.



ஆண்டுதோறும் அருங்காட்சியக வாரவிழா நடத்தப்படுகிறது. இதில் சிறப்புக் கண்காட்சிகள், சிறப்புரைகள், பள்ளி—கல்லூரி மாணவர்களுக்குப் பலவகையான போட்டிகள், கலை நிகழ்ச்சிகள், கருத்தரங்கங்கள் போன்றவைகளும் இடம்பெறுகின்றன. ஒவ்வொரு ஆண்டும் குழந்தைகள் தினத்தை ஒட்டிப் பள்ளி மாணவ மாணவியருக்கு ஓவியப்போட்டியும் நடத்தப்பட்டு, மாணவர்களின் படைப்புகள் சிறப்புக் கண்காட்சியில் அமைக்கப்படுகின்றன.

இராணிமங்கம்மாள் மன்றம் பொறுப்பேற்கப்பட்டதிலிருந்து இக்கல்விப் பணிகள் யாவும் அம்மன்றத்திலேயே நடத்தப்பட்டுவருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.

பார்வையாளர்கள் காலை 9.30 மணி முதல் மாலை 5 மணி வரை இடைவேளையின்றி அருங்காட்சியகத்தைப் பார்வையிட இலவசமாக அனுமதிக்கப்படுகின்றனர். வெள்ளிக்கிழமையை வார விடுமுறையாகக் கொண்டுள்ள இவ்வருங்காட்சியகம், இரண்டாம் சனிக்கிழமைகள், குடியரசு நாள், விடுதலை நாள், காந்தியடிகள் பிறந்த நாள் ஆகிய நாட்கள் தவிர மற்ற அரசு விடுமுறை நாட்களிலும் கூடப் பார்வையாளர்களுக்கெனத் திறந்து வைக்கப்படுகிறது. திருச்சி மாநகரில் கவினுற அமைந்துள்ள இந்த அருங்காட்சியகத்தில் உள்ள — 10ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த குறிப்பிடத்தக்க சில சிற்பங்கள் பற்றி இங்கே குறிப்பிட்டே ஆகவேண்டும்.



இவ்வருங்காட்சியகச் சிற்பங்களுக்கெல்லாம் முன்னின்று பார்வையாளர்களை வரவேற்பது குழுமணியில் கண்டெடுக்கப்பட்ட புத்தர் சிலையாகும்.

அங்க வடிவங்களில் பங்கம் ஏதுமின்றி ஆனால் முப்பங்க நெளிவில் புத்தரின் இருபுறத்திலும் கிங்கரர்கள். அவர்கள் முகத்தில் ஆனந்தக் களிப்பு மார்பில் பட்டையாக அணிகலன்கள். தலையில் கரந்த மகுடம் அணிந்துள்ளனர். இடையில் அணிந்துள்ள ஆடை அவர்கள் தொடை மீது அழகுறப் படிந்துள்ளது. அரச மரத்தடியில் அமர்ந்திருக்கும் புத்தரின் முகத்தில் தவழும் மிக மெல்லிய புன்னகை காண்போர் மனத்தை நொடியில் கவர்ந்து அமைதிப்படுத்தும் தன்மை கொண்டது. நீண்டு, தொங்கும் செவிமடல் அறிதுயிலில் ஆழ்ந்திருக்கும் விழிகள் சுருண்ட முடிப் படிவுகளின் மேலெழுந்து நிற்கும் ஞானச்சுடர் தலையைச் சுற்றி அமைந்துள்ள பிரபை யாவும் எழில் கோலங்கள். அணிகலன்களற்ற மார்பில் இடது தோளிலிருந்து இறங்கிவரும் ஒட்டிய உடை உடலில் விரிந்து படர்கிறது. சிற்பம் இடையளவில் இல்லாது போனாலும் புத்தரின் தவக்கோலத்தின் **முழுமையைக் குறைவின்றித்** தெளிவுபடுத்துகிறது.

இச்சிற்பம் — பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தது ஆகும். உயரம் ஐந்தடி.

சோழர் சாளுக்கிய மண உறவில் தோன்றிய குலோத்துங்கன் தொடுத்த கலிங்கப்போர் வரலாற்றுச் சிறப்பு மிக்கதாகும்;அதனைச் சயங்கொண்டார் பரணியாய்ப் பாடி இலக்கியச் சிறப்பையும் ஏற்படுத்தினார். சலியாத தனியாண்மைத் தருகன் வீரர் காளியை வழிபட்டுப் போரில் வெற்றி பெறத் தருக வரம் என்று வேண்டுவதுடன் அவர் பெறும் வரத்திற்கு ஈடாகத் தங்கள் உடல் உறுப்புகளை அறுத்துப் பலியாகத் தருவோம் என்று உறுதி கூறிக் கலிங்கப் போருக்குச் சென்ற வீரர்கள் வரம் பெற்றனர். போர்க்களம் சென்று வெற்றியும் பெற்றனர். 'பெற்ற வெற்றிக்குப் பலியாகத் தலையை அரிந்து தருவல்' என உறுதியிட்ட வீரர்கள் காளி கோயிலுக்குச் சென்று அடிக்கழுத்தில் வாளைப் பதித்துத் தலையை அறுத்துக் காளியின் கையில் கொடுத்ததாகக் கவிஞர் பாடியிருக்கிறார்.

இக்காட்சியை விளக்க இங்கே மூன்று வீரக்கற்கள் உள்ளன.

அழுந்தூரில் கிடைத்த வீரக்கல்லில் வீரன் அமர்ந்த நிலையில் உள்ளான். வலதுகை வாள்கொண்டு கழுத்தை வெட்டுவதாகவும் இடதுகை தலைமுடியைப் பற்றிய நிலையிலும்



மேற்கண்ட மூன்று வீரக்கற்களும் பத்தாம் நூற்றாண்டைச் சேர்ந்தவைகளாகும். காலத்தால் இச்சிற்பங்களுக்குப் பிற்பட்ட கலிங்கத்துப் பரணியில் இக்காட்சி விளக்கப்பட்டுள்ளதால் தலையை அரிந்து வீரர்கள் காணிக்கையாக்கும் பழக்கம் பரணிக்கு முற்பட்ட காலத்தில் இப்பகுதியில் பரவலாக இருந்து வந்ததெனலாம்.

இவ்வாறான பல — இந்த அருங்காட்சியகத்திற்குப் பெருமை சேர்ப்பவைகளாகும்.



காட்டப்பட்டுள்ளது. கருப்பும், வெள்ளையும் துண்டு துண்டாகக் கலந்த கல்லில் வடிக்கப்பட்ட இச்சிற்பம் போர்க்களத்தின் பொருதலை விளக்கும் ஒரு வளர்கலை ஓவியமாகக் காட்சி தருகிறது. இதன் உயரம் 2.5 அடி.

உய்யக்கொண்டான் திருமலை என்னுமிடத்திலிருந்து கிடைத்த வீரக்கல்லில், வீரன் நின்ற நிலையில் வலக்கையில் வாளெடுத்துக் கழுத்தை அரிந்து இடக்கையால் உச்சித்தலையில் உள்ள மயிர்கற்றையைப் பிடித்து அறுபடும் தலையைத் தூக்கி எடுப்பதுபோல் செதுக்கப்பட்டுள்ளது. வீரனின் இடையில் மட்டும் இடைச்சுற்று ஆடை உள்ளது. கால்களில் காப்புகளும் காணப்படுகின்றன. இச்சிலையின் உயரம் 3.5 அடி. திருச்சிராப்பள்ளியில் கிடைத்த வீரக்கல் சிற்பநயம் பொங்கும் பேரெழிலுடன் வடிக்கப்பட்டுள்ளது.

முப்பங்க நிலையில் நிற்கும் வீரனிடத்தில் இப்போது போர்க்களத்தில் தோன்றும் விறைப்பு இல்லை. வாக்குறுதியை நிறைவேற்றுமிடத்தில் வெறி கொண்ட நிலை தேவையில்லை என்பதால் அமைதியாக முப்பங்க நிலையில் நின்று இடுப்பில் தொங்கும் உறையை இடக்கையால் பிடித்து வலக்கையால் வாளை உருவித் தன் அடிக்கழுத்தில் பதித்து அறுப்பதுபோல் இச்சிற்பம் செதுக்கப்பட்டுள்ளது. மார்பில் மணிகளும் மாலைகளும் படர்ந்துள்ளன. இடுப்பிலிருந்து பாதம் வரை முழுமையான கீழாடை ஒழுங்காக வரிந்து கட்டப்பட்டுள்ளது. கைகளில் காப்புகளும் பூட்டப்பட்டுள்ளன.

**உயரம் 2¼ அடி**

## படக்குறிப்புகள்

- ☐ முருகப் பெருமான் — படிமச்சிற்பம் (15ஆம் நூற்றாண்டு)
- ☐ கலிங்கத்துப்பரணி நிகழ்ச்சியைக் குறிக்கும் சிற்பம் (10ஆம் நூற்றாண்டு)
- ☐ பஞ்சலோகத்தாலான அய்யனார் யானை (15ஆம் நூற்றாண்டு)
- ☐ லால்குடியில் கிடைத்த வீரர்கள் சிற்பம் (10ஆம் நூற்றாண்டு)

வேளாண்மை:

# வேளாண் உற்பத்தி

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் வேளாணமைத் துறையின் பணிகள் வியக்கத்தக்க வகையிலே வளர்ச்சி பெற்று வருகின்றன.

வேளாண்மையில் விதை முக்கிய இடுபொருள். விதையே விளைச்சலுக்கு அடிப்படை. எனவே விதைப்பெருக்கத் திட்டத்தில் ஆரம்பித்து- பயிர்ப் பாதுகாப்புத் திட்டம், உரமானியம், பண்ணை மகளிர் பயிற்சி, எண்ணெய்வித்துப் பெருக்குத் திட்டம், பயறு வகை அபிவிருத்தித் திட்டம் ஆகியவற்றில் இம்மாவட்ட வேளாண் பெருங்குடி மக்களின் நலன்கருதி செய்துள்ள பணிகள் பலவாகும்.

விதை உற்பத்தி, பயிர் பாதுகாப்பு, உரமானியங்கள், பண்ணை மகளிர் பயிற்சி, மானாவாரி நிலமேம்பாடு, விதை மினிகிட் வழங்கல், தென்னை அபிவிருத்தி, எண்ணெய்வித்து உற்பத்தி, தேசிய பயறு அபிவிருத்தித் திட்டம், பருத்தி அபிவிருத்தி, ஒருங்கிணைந்த தானிய அபிவிருத்தி, பாமாயில் மா சாகுபடி ஆகிய வகைகளில் 1996-97ல் ரூ.333 இலட்சம் செலவிடப்பட்டுள்ளது; 32,910 பேர் பயனடைந்துள்ளனர். 1997-98ஆம் ஆண்டிலோ ரூ.357 இலட்சம் செலவிடப்பட்டதில் 33,768 பயனாளிகள் பலன் பெற்றனர்.

***மரம் வளர்ப்புத் திட்டம் :***

மரமின்றி மழையில்லை; மழையின்றிப் பயிர் இல்லை; பயிர் இன்றி உயிர் இல்லை. இதனைக் கருத்தில் கொண்டு மரம் வளர்ப்பு திட்டமானது மாண்புமிகு **முதல்வர்** அவர்களால் 1997-98 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் மருங்காபுரி, புள்ளம்பாடி, முசிறி ஆகிய 3 வட்டாரங்களில் இத்திட்டம் சிறப்புறச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

***செயல்பட உள்ள வட்டாரங்கள் :***

1998-99ல் மணிகண்டம், மணச்சநல்லூர், உப்பிலியாபுரம், தா.பேட்டை, மணப்பாறை ஆகிய ஊர்களில் இந்த மரம் வளர்ப்புத் திட்டமானது நல்லவண்ணம் நிறைவேற்றப்பட நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டுள்ளன.

***பல்துறை விரிவாக்க பண்ணைகள் :***

1997-98ஆம் ஆண்டு 18 கிராமங்களில் 50 எக்டேர் திட்டம் செம்மையுறச் செயல்படுத்தப்பட்டது. பல்வேறு துறைகளின் திட்டங்களும் இப்பகுதியில் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டது.

நடப்பாண்டு (1998-99) அண்ணா மறுமலர்ச்சி திட்டம் செயல்படுத்தப்படும் 8 கிராமங்களையும் சேர்த்து, மொத்தம் 26 கிராமங்களில் 50 எக்டேர் பல்துறை செயல்விளக்கத்திடல் அமைக்கப்பட்டுச் செயல்படுத்தப்பட உள்ளது.

***பண்ணை மகளிர் பயிற்சி :***

தமிழகத்தில் வேளாண் உற்பத்தியைப் பெருக்கப் பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



வேளாண் உற்பத்தியில் பண்ணை மகளிரின் பங்கு மிகவும் முக்கியமானதாகும்.

வேளாண் பணிகளில் சுமார் 60 சதவிகிதத்துக்கும் மேலாகப் பெண்களின் பங்கு உள்ளது. நடவு செய்தல்,

பூர்த்தி பெறற இராமநாதபுரம் நீங்கலாக எல்லா மாவட்டங்களிலும் ரூ.28.73 கோடி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.



திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் திருச்சி மற்றும் லால்குடி, மணப்பாறை வேளாண் கோட்டத்தைச் சார்ந்த பண்ணை மகளிருக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகின்றது. 1997-98ஆம் ஆண்டு வரை திருச்சி மாவட்டத்தில் 72 கிராமப்புறப் பயிற்சிகளும், 26 சிறப்புப் பயிற்சிகளும், 16 பண்ணை மகளிர் கருத்தரங்குகளும், 2 தீவிர சிறப்புப் பயிற்சிகளும் 414 தொடர் பணிகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன. 1800 பண்ணை மகளிரும் 13,500 சக பண்ணை மகளிரும் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளார்.

களையெடுத்தல், அறுவடை செய்தல், தானியங்களை தூற்றி சுத்தம் செய்தல், ஏர் உழவு செய்தல், தண்ணீர் கட்டுதல், உரமிடுதல் போன்ற பல பணிகளைப் பெண்கள் செய்வதை நாம் பார்க்கின்றோம்.

தமிழ்நாட்டில் சுமார் 30 இலட்சம் விவசாயிகள் சுமார் 75 இலட்சம் எக்டேர் பரப்பளவில் சாகுபடி செய்து வருகின்றனர். இதில் 52 சதவிகிதம் பரப்பு சிறு மற்றும் மிகச் சிறு விவசாயிகள் சாகுபடி செய்து வருகின்றனர். தமிழகத்தில் விவசாய முன்னேற்றம் சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகளின் முன்னேற்றத்தில் அடங்கியுள்ளது என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இதை மனதில் கொண்டுதான், வேளாண்மையில் முக்கியப் பங்கு வகிக்கும் சிறு மற்றும் மிகச்சிறு பண்ணை மகளிரின மேம்பாட்டுக்காகத் 'தமிழ்நாடு பண்ணை மகளிர் பயிற்சி திட்டம்' 1986ஆம் ஆண்டு முதல் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

திட்டத்தின் நீண்ட கால நோக்கமாவது பண்ணை மகளிரின் சமூகப் பொருளாதார நிலையை மேம்படுத்தல், சிறு மற்றும் மிகச்சிறு விவசாயிகள் உற்பத்தியைப் பெருக்குதல் போன்றவை ஆகும். குறுகிய காலநோக்கம், பண்ணை மகளிருக்கு வேளாண தொழில்நுட்பம் பயிற்றுவித்தல், பண்ணை மகளிர்பிற பண்ணை மகளிருக்குக் கற்றுக் கொடுக்கச் செய்தல், வேளாண விரிவாக்கத் துறையை நல்ல முறையில் பயன்படுத்த உதவுதல் ஆகும்.

***டென்மார்க் – டான்வா :***

டெனமார்க் நாட்டின 'டென்மார்க் அனைத்து உலக வளர்ச்சி நிதி உதவி நிறுவனம்' என்ற நிறுவனத்தின் மூலமாக இத்திட்டம் நிதிஉதவி பெறுகின்றது.

இத்திட்டம் 1986 முதல்1993 வரை டான்வா பகுதியில் ரூ. 3.9 கோடி நிதியுதவியுடன் செயல்படுத்தப்பட்டது. பகுதி – 2, 1994 முதல் தமிழ்நாட்டில் சென்னை மற்றும் திட்டம்

இத்திட்டத்தின் பயன் நிலை பெற உதவும் நோக்கோடு 1998–99ஆம் ஆண்டு முதல் டான்வா திட்டத்தின் கீழ் கிராமப்புறப் பயிற்சி, கருத்தரங்கு, தொடர்பணி தவிர – பண்ணை மகளிர் சுய உதவிக் குழுக்கள் அமைக்கவும், இக்குழுக்களுக்கு விவசாயம் சார்ந்த உபதொழில்களில் சிறப்புப் பயிற்சிகள் அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

விவசாயப் பெருமக்களுக்கு பேருதவி புரியும் வகையில் இந்த இரண்டாண்டு காலத்தில் 1,15,000 வேளாண் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள 300 உழவர் விவாதக்குழு அமைபபாளர்கள் மற்றும் உறுப்பினர்களையும் சந்தித்து, சிறப்பாகச் செயல்படத்தக்கவண்ணம் ஊக்குவிக்கப்படுகிறது. மாதந்தோறும், விவசாயிகள் பயன்பெறும் வகையில் 'திருச்சிராப்பள்ளி மேழிச் செல்வம்' என்ற மாதாந்திர இதழ் ஒன்றும் வேளாண்மைத் துறை மூலம் வெளியிடப்படுகிறது. உழவர்களின் தேவைக்கேற்பத் தொழில்நுட்பங்கள் அடங்கிய சிறப்பு வெளியீடுகள் 5ம் வெளியிடப்படுகின்றன.

வானொலி மூலம் 240 தொழில்நுட்ப அறிவிப்புகளும் 100 வேளாண்மைச் செய்திகளும் அறிவிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் உழவர் பெருவிழாவும் மற்றும் உழவர் பேரணியும் நடத்தப்படுகிறது.

சுமார் ஐம்பது விவசாயிகள் வேளாண் கல்விச் சுற்றுலா அழைத்துச் செல்லப்படுகிறார்கள். இதன்மூலம் மற்ற மாவட்டங்களைவிட நம் பணி சிறக்க நாம் பாடுபட வேண்டும் என்கிற எண்ணம் அவர்கள் உள்ளங்களிலே விதைக்கப்படுகிறது. ★

## மழலையர் மற்றும் தொடக்கப்பள்ளிகளில் தமிழைப் பயிற்று மொழியாக்கிட கலைஞர் ஆணை.

முதலமைச்சர் **கலைஞர்** அவர்கள் 16-11-98 அன்று அரசு தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த போது கூறியதாவது:

**கலைஞர்** : இன்று என்னுடைய முன்னிலையில் கல்வித்துறை அமைச்சர் பேராசிரியர், தமிழ் வளர்ச்சித்துறை அமைச்சர் தமிழ்க்குடிமகன் மற்றும் அதிகாரிகள் கலந்துபேசி மழைலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் குறித்து பின்வரும் முடிவுகளை எடுத்து அறிவிக்கப்படுகின்றது.

1. தமிழை ஒரு பாடமாகச் சொல்லி தரும் (as a subject) பள்ளிகளுக்குத் தான் ஏற்பளிக்கப்படும்.

2. அடுத்த கல்வி ஆண்டு முதல் (1999-2000) பூகோளம், வரலாறு, கணிதம், சமூக அறிவியல் போன்ற பாடங்களைத் தமிழ் வழியில் (through the Medium of Tamil) கற்பிக்க வேண்டும்.

3. தமிழ் மொழி வழியில் பல மழலையர் பள்ளிகள் இயங்குகின்றன. அவற்றிற்குப் பின்வருமாறு சலுகைகள் வழங்கப்படும்.

அ. ஏற்புக் கட்டணம் பாதியாகக் குறைக்கப்படும்.

ஆ. இப்பள்ளிகளுக்கும் அரசின் பாட நூல்கள் இலவசமாக வழங்கப்படும்.

4. ஏற்கெனவே உள்ள விதிகள் 37(அ)யின்படி, அரசின் ஏற்பு பெறாத பள்ளிகளில் கல்வி பயிலும் குழந்தைகளை அரசு ஏற்புப் பெற்ற பள்ளிகளில் சேர்க்கக் கூடாது என உள்ளது. இந்த விதியில் எந்தவகையான தளர்வும் செய்யாமல் தொடர்ந்து கடைப்பிடிக்கப்படும். 1-1-1998 அன்று வெளியிட்ட விளம்பரத்தின் அடிப்படையில் தமிழகத்தில் அரசின் ஒப்புதல் பெறாத மழலையர் மற்றும் தொடக்கப் பள்ளிகள் தொடர்ந்து இயங்குவதை அரசு அனுமதிக்காது.

5. தமிழகத்தில் தமிழ் படிக்காமலேயே ஆங்கிலத் தோடு தத்தம் தாய்மொழியை மட்டுமே படிக்கும் தொடக்க மற்றும் நடுநிலைப் பள்ளிகள் மொத்தம் 1008. இந்தப் பள்ளிகள் அனைத்தும் தமிழ் ஆசிரியர்கள் அமர்த்தப்பட்டு அவரவர் தாய்மொழி, தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றைக் கற்றுக் கொள்ள வகை செய்யப்படும். இவ்வகுப்பு நேரங்களை அனைத்துத் தரப்பினரின் கலந்துரையாடலுக்குப் பின்னர் முடிவு செய்யப்படும்.

**கேள்வி** : இந்தக் கலந்துரையாடல் யாருடன் எப்போது நடைபெறும்?

**கலைஞர்** : சம்பந்தப்பட்ட கல்வியாளர்களோடு கலந்து பேசுவோம். எப்போது பேசுவோம் என்பது பேசிய பிறகு தெரியும்.

**கேள்வி** : எப்போது முதல் இது அமலுக்கு வரும்?

**கலைஞர்** : வரும் கல்வியாண்டிலிருந்து அமலுக்கு வரும். ஆனால், இப்போது முதலே அதற்கான கண்காணிப்புப் பணிகள் எல்லாம் தொடங்கும்.

**கேள்வி** : இதனால் இந்தி பற்றி உங்களுடைய நிலையில் மாறுதல் ஏற்படுமா?

**கலைஞர்** : எங்கள் நிலையில் எப்போதும் மாறுதல் கிடையாது.

## கால்நடை பராமரிப்புத்துறையை 2 ஆகப் பிரித்து கலைஞர் ஆணை

பன்னெடுங்காலமாக இயங்கி வரும் கால்நடை பராமரிப்புத்துறை விவசாயத்திற்கு அடுத்த நிலையில் நாட்டின் பொருளாதார வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்து அரும் பணியாற்றி வருகிறது. அரசும் இத்துறையின் மீது சிறப்பான கவனம் செலுத்தியதால் இத்துறை மென்மேலும் வளர்ச்சி அடைந்துள்ளது.

பார்வை கிளை நிலையங்கள் -

| | |
|---|---|
| கிளை நிலையங்கள் | - (SUB CENTRES) |
| மருந்தகங்கள் | - (DISPENSARIES) |
| மருத்துவமனைகள் | - (HOSPITALS) |
| பன்முக மருத்துவமனைகள் | - (POLY CLINIC) |
| நோய் புலனாய்வு மையங்கள் | - (DISEASE INTELLIGENCE UNIT) |
| நடமாடும் மருந்தகங்கள் | - (MOBILE UNIT) |
| பண்ணைகள் | - (FIRMS) |

உலக வங்கித் திட்டம், டென்மார்க் நிதி உதவி திட்டம், மத்திய மாநில அரசு திட்டப்பணிகள், பயிற்சிகள், பயனீட்டாளர்கள் தேர்வு போன்ற பணிகள் அனைத்தையும் ஒரே இயக்குநரால் பராமரிப்பது, ஆய்வு செய்து குறைபாடுகளைக் களைந்து முறைபடுத்துவது போன்ற பணிப்பளு அதிகரித்துள்ளமையால் இத்துறை மேலும் செம்மையாகச் செயல்பட வேண்டி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இத்துறை சார்ந்த பணிகளை இரண்டாகப் பிரித்து மேலும் ஒரு இயக்குநர் பதவி உருவாக்கி, கால்நடைப் பராமரிப்பு இயக்குநர் மற்றும் கால்நடை மருத்துவப் பணி இயக்குநர் என ஆணை பிறப்பித்துள்ளார். ★

# மாவட்டத் தொழில் வளர்ச்சி மையம்

திருச்சிராப்பள்ளி மாவட்டத் தொழில் மையம், தொழில் துவங்க ஆர்வமுள்ள தொழில் முனைவோர்களை இனங்கண்டு தற்காலிகச் சிறுதொழில் சான்று, நிரந்தரச் சிறுதொழில் சான்று, புதிய நிறுவனங்களுக்குச் சிறுதொழில் சான்று, கைத்திறன் குடிசைத் தொழில் சான்றுகளை வழங்கி வருகிறது.

### முதலீட்டு மானியம்

புதிதாகத் தொழில் துவங்கிய சிறுதொழில் நிறுவனங்களுக்கு, அவர்கள் முதலீடு செய்த நிரந்தர முதலீட்டில் 15/20 சதவீதம் மான்யம் தமிழக அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் மூலம் 1996 முதல் 100க்கு மேலான நிறுவனங்கள் இம்மாவட்டத்தில் பயனடைந்துள்ளன. ஏறத்தாழ 140 இலட்சம் ரூபாய் அவர்களுக்கு வழங்கப்பட்டிருக்கிறது.

### மின்மானியம்

புதிய சிறுதொழில் நிறுவனங்களுக்கு மின்மான்யம் முறையே 40, 30, 20 சதவீதங்கள் முதல் மூன்று ஆண்டுகளுக்கு வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி திட்டத்தில் 390 நிறுவனங்கள் ரூ.62.81 இலட்சம் உதவி பெற்றுப் பயனடைந்திருக்கின்றன.

### வட்டியில்லா விற்பனை வரி தள்ளிவைப்பு

வட்டியில்லா விற்பனை வரி தள்ளிவைப்புத் திட்டத்தின்கீழ் 96-97ஆம் ஆண்டு முதல் 20 நிறுவனங்கள் ரூ.4 கோடி அளவில் பயனடைந்திருக்கின்றன.

### வட்டியில்லா விற்பனை வரி தள்ளுபடி

வட்டியில்லா விற்பனை வரி தள்ளுபடி திட்டத்தின் கீழ் 96-97ஆம் ஆண்டு முதல் 5 நிறுவனங்கள் ரூ.1.21 கோடி உதவி பெற்றுப் பயனடைந்து உள்ளன.

பெண் தொழில் முனைவோர்களுக்குத் தொழில் துவங்க 65 பேர்களுக்குப் பயிற்சி 96-97ஆம் ஆண்டு முதல் கொடுக்கப்பட்டது; அவர்களில் 13 பேர் தக்க நிறுவனங்கள் தொடங்கியுள்ளனர்.

### ஒருமுனை உரிமம்

மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையில் நடைபெறும் ஒருமுனை உரிமம் பெற்றுத் தருதல் கூட்டத்தின் 96-97ஆம் ஆண்டு முதல் 12 நிறுவனங்கள் உரிமம் பெற்றிருக்கின்றன.

### இடர் களைப்புப் பணி

தொழில் துவங்கும் தொழில் முனைவோர்களுக்கு ஏற்படும் இடர்பாடுகளைக் களைந்து தொழில் துவங்க மாவட்டத் தொழில் மையம் ஆற்றிய பணிகள் மூலம், 52 பேர் அக்டோபர் வரை திருச்சி மாவட்டத்தில் தொழில் துவங்க முன் வந்துள்ளனர்.

### இந்தியப் பிரதமரின் சுயவேலை வாய்ப்புத் திட்டம்

இத்திட்டத்தின் மூலமாக, நவம்பர் 1998 முடிய 1,091 பேர்களுக்குக் கடன் வழங்கப்பட்டிருக்கிறது.

### எங்கும் தொழில்மயம்

திருச்சிராப்பள்ளியில் உள்ள மாவட்டத் தொழில் வளர்ச்சி மையத்தின் மூலம் கடன் வாங்கித் தொழில் தொடங்கியிருப்பவர்களில் சிலரை நேரில் சந்தித்து அதன் பயன்பாடு பற்றித் தெரிந்து கொள்ள நாம் எண்ணினோம்.

### ஜனனி மாவுமில்

வயலூர் மெயின்ரோட்டில், உய்யக் கொண்டான் திருமலை என்ற இடத்திலுள்ள ரங்கா நகரில் 'ஸ்ரீ ஜனனி மாவுமில்' வைத்திருக்கும் திரு.வி.பால சுப்பிரமணியத்தைப் பார்த்துக் கேட்டோம்;




அபிராமி ஜெராக்ஸ்



ஜனனி மாவு மில்

"எப்ப இந்த மில்லெ ஆரம்பிச்சிங்க - மாவட்டத் தொழில் வளர்ச்சி மையத்துல எவ்வளவு கடன் வாங்கினிங்க?"

"அறுபத்தையாயிரம் ரூபாய் கடன் வாங்கி, இந்த வருஷம் மார்ச்சுலதான் இதை ஆரம்பிச்சேன்",

"ஜனனின்னா...?"

"என்னோட மனைவிங்க!"

"சரி, தொழில் எப்படி நடக்குது?"

"ஒரு நாளைக்கு நூறு ரூபாய்க்குக் குறையாமெ வருமானம் இருக்கும்; தீபாவளி நேரத்துல அதிகம் வந்தது!"

"வாங்கின கடனெ... பாக்கியில்லாமெ கட்டிகிட்டு வர்றீங்களா?"

"கடைக்கு மாச வாடகையே அறுநூறு ரூபாய்ங்க. கரண்ட் சார்ஜ் தொள்ளாயிரம் ஆகுது. ஆயிரத்து அறுநூறு பாங்கிற்கு கட்டும்படி இருக்கு; இப்ப... போன மாசம்தான் பாக்கி வெச்சுட்டேன்; வியாபாரத்தை விருத்தி செய்யணும்னு எண்ணெய் வாங்கியும் வியாபாரம் செய்றேன். கூடிய சீக்கிரமே சரியா சம்பாதிச்சி, பாக்கியே வைக்காமெ கட்டீருவேன் சார்!" என்றார், பாலசுப்பிரமணியம்.

"மேற்கொண்டு ஏதாவது கடன் வாங்கறதா இருக்கீங்களா?"

"இப்போதைக்கு இல்லீங்க. என்னாட்டம் ஏழை எளியவங்கமேல **கலைஞர்** அரசு நம்பிக்கை வெச்சு இதாட்டம் கொடுக்கிற கடனை முதல்ல சரியாப் பயன்படுத்தணும்; அப்புறம் திருப்பிக் கட்டணும். அந்த நாணயத்தை நான் காப்பாத்திக்குவேன். அப்புறம்தான் அடுத்த கடன்." அவர் குரல் மிகுந்த நம்பிக்கையோடு ஒலித்தது.

'இவ்விடம் அரிசி, கோதுமை, கடலைப் பருப்பு, மிளகாய், மல்லி, மசாலா தூள், சர்க்கரை ஆகியவை சுத்தமாக அரைத்துக் கொடுக்கப்படும். இங்கு அரவை செய்யப்படும் பொருளின் நிறம், குணம், மணம் ஆகியவற்றில் எந்தவித மாறுதலுமின்றி நேர்த்தியாக அரைத்துத் தரப்படும்' - என்றிருந்த விளம்பரப் பலகையைப் பார்த்தவாறே அங்கிருந்து நாம் விடைபெற்றோம்.

**அபிராமி ஜெராக்ஸ்**

அதையடுத்து, திருச்சி- தென்னூரில் 'அபிராமி ஜெராக்ஸ்' நடத்திவரும் திருமதி லட்சுமியைப் போய்ப் பார்த்தோம். முகம் நிறைந்த சிரிப்போடு அவர் வரவேற்றதி லிருந்தே அவர்களுக்கு வருமானம் நல்லபடி இருக்கும் என்பதை நம்மால் உணர முடிந்தது.

"மாவட்டத் தொழில் மையம் மூலமா இந்தக் கடை வைக்க எவ்வளவும்மா கடன் வாங்கினீங்க?"

"எங்க மகள் அபிராமி பெயர்ல ஆரம்பிச்ச இந்த ஜெராக்ஸ் கடைக்காக 95 ஆயிரம் ரூபாய் கடன் வாங்கினோம்".

"கடன் வாங்கித் தொழில் தொடங்க ஏதாவது சிரமப்படவோ, கஷ்டப்படவோ, வேண்டி இருந்துதுங்களா?"

நாம் இப்படிக் கேட்டதும், மெல்லச் சிரித்துவிட்டு லட்சுமி சொன்னார் - "நீங்க கேட்கிறது எனக்குப் புரியுதுங்க சார். அப்படியொண்ணும் சிரமமோ, கஷ்டமோ எங்களுக்கு ஏற்படலை. என் வீட்டுக்காரரைன்னா கேட்டுப் பாருங்களேன்" என்று கூறி அவர் முடிக்குமுன் - அருகிலிருந்த அவர் கணவர் கிருஷ்ணமூர்த்தி- "ஆமாங்க சார். முன்னே வேற ஒரு பேங்க் மூலமா முயற்சி பண்ணி கொஞ்சம் அலைஞ்சோம். பிறகுதான் சென்ட்ரல் பேங்குக்கு வந்தோம். கடன் ரொம்பவே ஈஸியா கிடைச்சிது ஒரு தொந்தரவும் இல்லை!" என்றார்.

"மாசாமாசம் எவ்வளவு கட்றீங்க?"

"ரெண்டாயிரம் ரூபா கட்றம்" என்று அந்த அம்மையார் சொல்ல, அவர் கணவர் - "ஒரு நாளைக்கு முந்நூறு ரூபாய்க்குக் குறையாமெ வருமானம் இருக்கிறதாலே, பாக்கி யெதுவும் வைக்காமெ ஒழுங்கா எங்களால பணம் கட்ட முடியுதுங்க" என்றார் அவர் கணவர்.

ஜெராக்ஸ் மூலம் வந்த வருமானத்தில், இவர்கள் ஒரு எஸ்.டி.டி. பூத்தும் வைத்திருக் கிறார்கள்.

—பி.எல்.ஆர்.

★ ★ ★

## தமிழகத்தில் உள்ள தொடக்கப்பள்ளிகளில் இந்த ஆண்டில் 7,646 இடைநிலை ஆசிரியர்கள் நியமனம்

**கல்வி அமைச்சர் பேராசிரியர்** அறிவிப்பு!

**1996** ஆம் ஆண்டு இந்த அரசு அமைந்தபின் தமிழகத்தில் உள்ள பள்ளிகளில் காலியாக இருந்த ஆசிரியர் பணியிடங்கள் அனைத்தும் படிப்படியாக நிரப்பப்படுவதற்குத் தமிழ்நாடு அரசு ஆணையிட்டு அவ்வாறே நிரப்பப்படுகின்றன.

இடைநிலை ஆசிரியர்கள் நியமனத்தைப் பொறுத்தவரை முன்பிருந்த முறையை மாற்றி வேலைவாய்ப்புப் பதிவு முன்னுரிமையின்படி தகுதி பெற்றவர்களை நியமனம் செய்திட இந்த அரசு ஆணையிட்டது. இந்த ஆணையின்படி, கடந்த இரண்டு ஆண்டுகளில் இதுவரை 23,462 இடைநிலை ஆசிரியர்கள் வேலைவாய்ப்புப் பதிவு முன்னுரிமை அடிப்படையில் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

தொடக்க, நடுநிலைப் பள்ளிகளில் கல்வியின் தரத்தை மேலும் உயர்த்தும் வகையில், இந்த 1998-99 ஆம் கல்வியாண்டில் தமிழகம் முழுவதும் உள்ள தொடக்கப்பள்ளிகளிலும், நடுநிலைப் பள்ளிகளிலும் காலியாக உள்ள இடைநிலை ஆசிரியர் பணியிடங்களில் வேலைவாய்ப்புப் பதிவு முன்னுரிமை அடிப்படையில் மொத்தம் 7,646 இடைநிலை ஆசிரியர்களை நியமனம் செய்திட 7-11-1998 அன்று முதல்வர் **கலைஞர்** அவர்கள் ஆணையிட்டுள்ளார். ⌘

**திருச்சி மாவட்டம் உறையூரில், அக்காலத்தில் தமிழறிஞர் பலரும் வாழ்ந்து வந்தார்கள்; அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் – இளம் பொன் வாணிகனார், ஏணிச்சேரி முடமோசியார், முதுகண்ணன் சாத்தனார், முதுகூத்தனார், கருவூர் கந்தப்பிள்ளை, பெருஞ்சதுக்கத்துப் பூதநாகனார், நக்கண்ணையார்.**

**தமிழகத்தில் ஒகனக்கல், ராசிமணல் புனர் மின்நிலையங்கள் அமைக்கும் சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து உரிய நடவடிக்கை எடுக்க முடிவெடுக்கப்பட்டது.**

**செய்யூர் அனல் மின் நிலையத் திட்டம் குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. தேசிய அனல் மின் கழகம் 2,500 மெகாவாட் திறன் கொண்ட ஒரு அனல் மின்நிலையத்தினைச் செய்யூரில் அமைக்கத் திட்டமிட்டுள்ளது. அந்தத் திட்டத்தைத் தொடங்கத் தேவையான மாசுக் கட்டுப்பாட்டு வாரியத்தின் அனுமதி பெற்று, ஏப்ரல் 14ஆம் தேதி அடிக்கல் நாட்ட முடிவெடுக்கப்பட்டது.** □

*ஆலயங்களுக்குச் சொந்தமான காலிமனை, கட்டடங்கள், குடியிருப்புகள், கடைகள் ஆகியவற்றுக்குச் சந்தை நிலவரத்திற்கொப்ப வாடகையை உயர்த்தவும், உயர்த்திய வாடகையை ஏற்றுக் கொள்ளாதவர்களின் குத்தகைக் காலத்தை முடிவுக்குக் கொண்டு வந்து வெளியேற்றவும் உரிய சட்டத் திருத்தங்களைத் தமிழ்நாடு இந்து சமய அறநிலையச் சட்டத்தில் கொண்டு வருவதென அமைச்சரவைக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.* □

*திருச்சிராப்பள்ளியில் உள்ள திருவரங்கநாதர் கோயில் காவிரிக்கும், கொள்ளிடத்திற்கும் நடுவே அமைந்துள்ளது. 'பூலோக வைகுண்டம்' எனப்படும் இக்கோயிலில் ஏழு பிரகாரங்கள் உள்ளன. வைணவப் பெரியாரான ஸ்ரீராமானுஜர் இங்கே பல ஆண்டுகள் தங்கியிருந்து பூஜை புனஸ்காரங்களைச் செய்ததுண்டு.*

*இந்தக் கோயிலில்தான் கம்பராமாயணமும், அருணாசலக் கவிராயரின் இராம நாடகக் கீர்த்தனையும் அரங்கேற்றப்பட்டன என்பர்.*

*சோழ மன்னர்கள், பாண்டியர்கள், விஜயநகர மன்னர் காலங்களிலெல்லாம் இக்கோயிலின் கட்டுமானப் பணிகள் நடைபெற்றிருக்கின்றன. கலைஞர் அரசு, இக்கோயிலின் சிதைந்த சுற்றுச் சுவரைச் செப்பனிடப் பெருந்தொகை ஒதுக்கி, அதற்கான பணிகளை முடுக்கிவிட்டுள்ளது.*



திருச்சி வையம்பட்டியில் உள்ள பொன்னனி அணை

# வ.வே.சு.ஐயர் வாழ்விலே !



வ.வே.சு. ஐயர்

இந்திய விடுதலைப் போரில் தம்மை முழுமூச்சோடு ஈடுபடுத்திக் கொண்டவர்கள் பலராவர். அவர்களில் சிலர் வன்முறை மூலமே நாம் சுதந்திரம் பெறமுடியும் என்று நம்பினார்கள். அப்படிப்பட்ட நடவடிக்கைகளில் இறங்கினார்கள். வேறு சிலரோ வன்முறை என்பது நன்முறையல்ல; அகிம்சா வழிமூலமே அதைப் பெற்றுவிடலாம் என்று கருதினார்கள். சத்தியாக்கிரகம் போன்ற அறப்போர்களில் ஈடுபட்டார்கள்.

வன்முறையே நன்முறை என்ற கருத்துடைய இளைஞர்கள் கூட்டத்தில் குறிப்பிடத்தக்கவராக விளங்கினார் வ.வே.சு.ஐயர். இளம் ரத்தம் எப்போதும் அவரை வேகத்துடனேயே இருக்கச் செய்தது. விவேகத்திற்கும் குறைவில்லை.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த வரகனேரி இவருக்குச் சொந்த ஊர். திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் பிறந்து தேசிய உணர்வோடு நாடு காக்கப் பாடுபட்ட தியாகிகள் பட்டியலில் ஆண்களும், பெண்களுமாக ஏராளமானவர்கள் இருக்கின்றனர். அவர்களில் – 72ஆம் இடத்தில் குறிப்பிடப்பட்டிருக்கிறார் வ.வே.சு.ஐயர். எழுச்சிமிக்க வரலாற்றுக்குச் சொந்தக்காரர் இவர். வெங்கடேச ஐயர் – காமாட்சி தம்பதியருக்கு **2.4.1881–ல்** பிறந்த வ.வே.சு.ஐயர் தமது 12–வது வயதில் மெட்ரிகுலேஷன் தேர்வெழுதி மாநிலத்திலேயே முதல் மாணவராக வெற்றி பெற்றார்; அப்போதே, தம் மாமன் மகள் பாக்கியலட்சுமியை இவருக்கு மணம்முடித்து வைத்தனர். வ.வே.சு.ஐயர், அதைத் தொடர்ந்து பி.ஏ.படித்த பிறகு, சட்டப்படிப்பும் முடித்தார். இலண்டன் மாநகருக்குச் சென்று 26ஆம் வயதில் அங்கே பாரிஸ்டர் பட்டம் பெற்றார்.

அங்கே படிக்கச் சென்றிருந்த போதுதான் இவரது நெஞ்சில் சுதந்திரக் கனல் மூண்டது.

இலண்டன் மாநகருக்குப் படிக்க வந்திருந்த இந்திய இளைஞர்களெல்லாம் 'இந்திய விடுதி'யில் பிறருக்குத் தெரியாமல் அடிக்கடி கூடி, இந்தியச் சுதந்திரம் பற்றி விவாதித்தனர். 'சுதந்திர இந்தியா' என்கிற அமைப்பொன்றை நிறுவி, ஒத்த நினைப்புள்ளவர்களெல்லாம் ஒன்று திரண்டு கலந்தாலோசித்தார்கள்.

'ஸ்காட்லாண்ட் யார்டு போலீசாரால்' அவர்களுடைய நடவடிக்கைகள் கூர்ந்து கண்காணிக்கப்பட்டன.

அந்த நேரத்தில் அங்கிருந்த இந்திய இளைஞரான மதன்லால் திங்க்ரா என்பவரால் கொலை வெறியர்களான இரு பிரிட்டிஷ் அதிகாரிகள் சுட்டுக் கொலை செய்யப்பட்டனர். திங்க்ரா கைதானான். அந்த வழக்கில் சம்பந்தப்படுத்தி காவல்துறை, இந்திய இளைஞர்களை வழி நடத்திய வீரசாவர்க்கரையும் சிறையிலிட்டது.

அப்போது, வ.வே.சு.ஐயர் அடிக்கடி சிறைக்குப் போய் சாவர்க்கரைப் பார்ப்பதும் அவர் ஆலோசனை பெற்றுவந்து, வெளியே அதைத் தீவிரமாகச் செயல்படுத்துவதுமாக இருந்தார். அதன் காரணமாக பிரிட்டிஷ் ஒற்றர்கள் அவரைக் கைது செய்யத் தீர்மானித்தார்கள். வ.வே.சு.ஐயர் கிடைத்தால்தானே? அவர்களிடமிருந்து தப்பி, பிரான்ஸ் நாட்டுக்குப் போய்ச் சேர்ந்தார் இவர்.

அங்கும் தொடர்ந்த சோதனைகள் காரணமாகப் பல்வேறு மாறுவேடங்களில் உலா வரும்படி ஆயிற்று. சில்காலம் தான் அப்படியும் அங்கே வாழ முடிந்தது. பின்னர் அங்கிருந்து புதுச்சேரிக்கு வந்து சேர்ந்தார், வ.வே.சு.ஐயர்.

பிரான்ஸில் இருந்தபோது, பாரீசுக்குப்போய், சிறந்த ரகத் துப்பாக்கிகளை வாங்கி வந்து இரகசியமாக இந்திய விடுதலை வீரர்களுக்கு அனுப்பி, சுதந்திரப் போரைச் சுறுசுறுப்படைய வைத்த பெருமை – திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்தவரான இவருக்கு உண்டு; தன் இடுப்பிலும் எப்போதும் ஒரு கைத்துப்பாக்கி செருகி வைத்திருப்பார் இவர்!

அப்போது திருநெல்வேலியில் சுப்பிரமணிய சிவா, வ.உ.சிதம்பரம் பிள்ளை ஆகியோரைத் தண்டித்த மாவட்ட ஆட்சித் தலைவர் 'ஆஷ் துரை'யின் உயிருக்குக் குறிவைத்து, இளைஞன் வாஞ்சிநாதனுக்குத் துப்பாக்கி சுடும் பயிற்சியும் அளித்து, அனுப்பி, வஞ்சம் தீர்த்த பெருமையில் இவருக்கும் முக்கியப் பங்கு உண்டு.

இந்திய சுதந்திரப் போரில் இவ்வளவு தீவிரமாக இருந்த வ.வே.சு.ஐயர் மிகச் சிறந்த எழுத்தாற்றல் மிக்கவராகவும் திகழ்ந்தார். காந்தியாராலும் இவரது கை வண்ணங்கள் பாராட்டப்பட்டதுண்டு. ஆனால், காந்தியார் போராட்டம் பல கண்ட இவருடைய வேகத்தை மட்டுப்படுத்தவே விரும்பி முயன்றார்.

**1917–ல்,** புதுவைக்கு வந்த காந்தியடிகளின் அறிவுரையின்படி வ.வே.சு.ஐயர் அகிம்சாவாதியானார்.

வ.வே.சு. ஐயர் எழுதிய ஆங்கிலப் புத்தகங்கள், படிப்போர் நெஞ்சில் விடுதலைப் புயலை உருவாக்கும் என்பதால், ஆங்கில அரசு அவற்றைத் தடை செய்தது.

திருக்குறளையும், குறுந்தொகையையும், ஆங்கிலத்தில் அற்புதமாக மொழிபெயர்த்த சிறப்பு மட்டுமல்ல; கம்பராமாயணத்தை ஆராய்ச்சி செய்து ஆங்கில நூலொன்று எழுதிய பெருமையும் பெற்றவர் வ.வே.சு.ஐயர். **1921**ஆம் ஆண்டு 'தேச பக்தன்' 'பாலபாரதி' போன்ற பத்திரிகைகளையும் நடத்திய அவர், தனது எழுச்சிமிகு எழுத்தால் பெல்லாரி சிறையில், ஒன்பது மாதம் கைது செய்து அடைக்கப்பட்டிருந்ததும் உண்டு.

'மங்கையர்க்கரசியின் காதல்' போன்ற கதைகள் பலவற்றின் கார்த்தாவும் ஆன இவர், அறிவாற்றலோடு அஞ்சா நெஞ்சமும் வாய்க்கப்பெற்றவர்.



திருச்சியில் உள்ள வ.வே.சு.ஐயர் நினைவகம் இது. இங்கு வ.வே.சு.ஐயர் பற்றிய புகைப்படங்கள்-நூல்கள் ஆகியவைகளை வைத்திட ரூ.1.20 இலட்சம் நிதியொதுக்கி, **கலைஞரால்** ஆணையிடப்பட்டுள்ளது.



*"நம்மிடையே உள்ள தீண்டாமை நமது சமுதாயத்தின் முன்னேற்றப் பாதையில் குறுக்கிடும் கடக்க முடியாத முட்டுக்கட்டையாகும். இது இருக்கும் வரையில் நமக்கு முழுமையான விடுதலை கிட்டாது".*

**– அண்ணல் காந்தியடிகள்**

வ.வே.சு.ஐயர், தமது **42**ஆம் வயதில் **(1923)** சேரன்மாதேவியில் குருகுலம் ஒன்றை நடத்திவந்தார். தந்தை பெரியார் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சிச் செயலாளராக இருந்தபோது, பெரும் பிரச்சினைக்கு உள்ளான குருகுலம் இதுதான்!

அதைச் சேர்ந்த மாணவ–மாணவிகளையும், தனது மகள் சுபத்திரையையும் அழைத்துக் கொண்டு, **3.7.1925**ஆம் நாளன்று, பாபநாசம் கல்யாண தீர்த்தத்தில் நீராடச் சென்றார் வ.வே.சு.ஐயர். அவருடைய மகள் சுபத்திரை கால் இடறி அந்த நீர்வீழ்ச்சியில் வீழ்ந்து விட்டாள்; அது கண்டு பதறிப்போன வ.வே.சு.ஐயர் 'மகளே' என்று கதறி, தானும் நீர்வீழ்ச்சிக்குள் அவளைக் காப்பாற்றும் எண்ணத்தோடு பாய்ந்தார்.

அந்தோ, பரிதாபம்! தந்தையையும், மகளையும் அந்தக் கல்யாண தீர்த்தம் கபளீகரம் பண்ணிவிட்டது.

இன்றைக்கும், அந்த இடத்தில் தமிழக அரசு நிறுவிய வ.வே.சு.ஐயர் நினைவு மண்டபத்தை நாம் காணலாம்.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த அந்தத் தியாகசீலர் இன்றில்லை ஆயினும், அவர் புகழ் சுதந்திரப் பொன்விழாக் கண்ட இந்தியத் திருநாட்டில் என்றும் நின்று நிலவும்.

- 'சோழராஜா'

தமிழ்நாட்டில் தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமைக்காக மாண்புமிகு தமிழ்நாடு **முதலமைச்சர்** அவர்கள் தலைமையில் 22-10-98 மற்றும் 26-10-98 ஆகிய நாட்களில் சென்னையில் அனைத்துக் கட்சித்தலைவர்கள் கூட்டம் நடைபெற்றது.

2. இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவின் அடிப்படையில் தீண்டாமையை ஒழிப்பதற்காக தற்போது இருக்கக்கூடிய பல்வேறு மக்கள் தொடர்புச் சாதனங்களைக் கருத்தில் கொண்டு செய்தி-மக்கள் தொடர்புத்துறை வாயிலாகக் கீழ்க்காணும் வகையில் தீவிரப் பிரச்சாரம் மற்றும் விளம்பரப் பணிகள் மேற்கொள்ளப்படவேண்டும் என முடிவு செய்யப்பட்டது.

1. தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமை, சாதி சமய ஊர்வலங்களால் ஏற்படும் பிரச்சினைகள், தீண்டாமையால் விளையும் தீமைகள், தீண்டாமைத் தடுப்புச் சட்டம் போன்றவை குறித்து நிகழ்ச்சிகள், நாடகங்கள், பாடல்கள் போன்ற வடிவங்களில் தயாரித்து அகில இந்திய வானொலி நிலையங்கள் மூலம் ஒலிபரப்புதல். உள்ளாட்சி அமைப்புகள் மூலம் கிராமங்களில் வானொலிப் பெட்டியை ஒலிபெருக்கி வசதியுடன் அமைத்து இந்நிகழ்ச்சிகள் அனைத்து மக்களையும் சென்றடையும் வகையில் மக்கள் நலப் பணியாளர்களை ஒருங்கிணைத்து நடவடிக்கை மேற்கொள்ளுதல்.

# தீண்டாமை ஒழிப்பு–சமூக ஒற்றுமை

மக்கள் தொடர்புச் சாதனங்கள் மூலம்

## தீவிரப் பிரச்சாரம்

## – முதலமைச்சர் கலைஞர் ஆணை!

2. மேலும் ஒவ்வொரு நாளும் "இன்று ஒரு தகவல்" என்பது போல "இன்று ஒரு வேண்டுகோள்" என்ற தலைப்பின் கீழ், பல்வேறு சமய, சமுதாய, அரசியல் தலைவர்களின் பதிவு செய்யப்பட்ட வேண்டுகோள்களை ஒலிபரப்புதல்.

3. திரைப்பட நடிகர்கள் உட்பட பிரபலமானவர்களைக் கொண்டு சிறு குறும்படங்கள் (QUICKIES) தயாரித்து முக்கிய நிகழ்ச்சிகளின் ஒளிபரப்புக்கிடையில் விளம்பரம் செய்தல்.

4. தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்கு இடையே ஒளிபரப்பும் வகையில் மிகச்சிறு படங்கள் ஊடுவெளியீடாக (FILLERS) தயாரித்து இலவசமாக ஒளிபரப்பக் கோருதல்.

5. 'சிலை'டுகள் தயாரித்து தொலைக்காட்சி மற்றும் தனியார் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் இடையிலும், திரையரங்குகளிலும் விளம்பரம் செய்தல்.

6. தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் குறித்த பாடல்கள், நாடகங்கள் மற்றும் சித்திரப்படங்கள் (ANIMATION) ஆகியவற்றை ஒளிபரப்புதல்.

7. சிறிய குறும்படங்கள், சித்திரப் படங்கள் (ANIMATION) மற்றும் விளக்கப்படங்களை வீடியோ மற்றும் 35 மி.மீ. படங்களாக தமிழ்நாடு திரைப்படப் பிரிவு மூலம் தயாரித்து தொலைக்காட்சிகள் (தனியார் தொலைக்காட்சிகள் உட்பட) மற்றும் திரையரங்குகள் மூலம் வெளியிடுதல்.

   மேலும் ரயில் நிலையம், பேருந்து நிலையம் மற்றும் திருவிழா நடைபெறும் இடங்களில் 'வீடியோ வேன்' மூலமாக அவற்றைத் திரையிடுதல்.

8. தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம், சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் கருத்துக்களைக் கொண்ட நாடகங்களைச் சிறந்த கதையாசிரியர்களைக் கொண்டு தயார் செய்து, மத்திய அரசின் இசை மற்றும் நாடகப் பிரிவின் மூலமாக அனைத்து மாவட்டங்களிலும் கிராமப் பகுதிகளில் அறிவொளி இயக்கத்தினருடன் இணைந்து நடத்துதல்.

   மேலும், மாநில அரசு சிறந்த நாடகக் குழுக்களைத் தேர்வு செய்து பட்டியல் தயாரித்து, கிராமங்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட நாடகங்களை நடத்துதல்.

   கிராமியக் கலை நிகழ்ச்சிகள், வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம் போன்ற நிகழ்ச்சிகள் வாயிலாகக் கருத்துக்களைக் கூறுதல்.

9. தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையை சிறப்பித்துக் காட்டும் நாடகங்களுக்கு ஆண்டுதோறும் விருதுகள் வழங்குதல்.

10. வார, இருவார, மாத இதழ்களில் வெளியாகும் தீண்டாமை ஒழிப்பை வலியுறுத்தும் சிறப்புச் சிறுகதைகள், கட்டுரைகள் ஆகியவற்றிற்கு அவ்வப்போது போட்டிகள் நடத்தி சிறந்தவற்றை தேர்ந்தெடுத்து பரிசுகள் வழங்குதல்.

11. நாளிதழ்களில் வெளியிடப்படும் அனைத்து அரசு விளம்பரங்களுடன் தீண்டாமை ஒழிப்பு மற்றும் சமூக ஒற்றுமை குறித்த வாசகங்களைச் சேர்த்து வெளியிடுதல், தனியாகச் சிறப்பு விளம்பரங்களையும் அவ்வப்போது வெளியிடுதல்.

12. தீண்டாமை ஒழிப்பு, மத நல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமை குறித்தும், சாதிக் கலவரங்களைத் தவிர்க்கும் வகையில் சிறப்பாகப் பேசும் பேச்சாளர்கள், இப்பணியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ளும் அரசு அலுவலர்கள், பணியாளர்கள், முக்கியப் பிரமுகர்கள், அரசு சாரா தொண்டு நிறுவனத்தினர், நாளிதழ்கள், வார-மாத இதழ்கள், வானொலி, தொலைக்காட்சியினர் ஆகியோருக்கு விருதுகள் வழங்குதல்.

13. அரசின் சார்பில் வாரந்தோறும் வெளியிடப்படும் சுவரொட்டியான 'அரசு செய்தி' இதழ்தோறும் வாசகங்களை வெளியிடுதல்.

14. சுவரொட்டிகள் வாயிலாகக் கருத்துச் சித்திரங்கள் வெளியிட்டு, பொதுமக்கள் அதிக அளவில் கூடும் இடங்களில் வெளியிடுதல், சுவர் விளம்பரங்களை அதிக அளவில் செய்தல்.

15. அனைத்து அரசுப் பேருந்துகளிலும் ஒட்டும் வகையில் ஒட்டுவில்லைகள் (ஸ்டிக்கர்ஸ்) தயாரித்து அளித்தல், பயணச்சீட்டுகளின் பின்பக்கத்தில் வாசகங்கள் அச்சிட்டு வழங்குதல்.

16. விவசாய இடுபொருட்கள் வழங்கப்படும் பைகள், கூட்டுறவு வங்கிகளில் கணக்குப் புத்தகங்கள் வழங்கப்படும் பைகள், கூட்டுறவு வங்கிகளின் கணக்குப் புத்தகங்கள் ஆகியவற்றிலும் நுகர்பொருள் அங்காடிகள் வாயிலாக விற்கப்படும் பொருட்களின் உறைகள் மற்றும் பால் உறைகள் மீதும் உரிய வாசகங்கள் அச்சிடல்.

17. அஞ்சல் உறை மற்றும் அஞ்சல் அட்டைகளில், வாசகங்கள் அச்சிடல்.

18. அரசுப் பொருட்காட்சிகளில் நாடகங்கள் நடத்துதல்.

19. 1999-ஆம் ஆண்டினைத் தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கச் சமூக ஒற்றுமை ஆண்டாக அறிவித்தல்.

20. சுதந்திரப் பொன்விழாவை முன்னிட்டுத் தயாரிக்கப்பட்ட 'வந்தே மாதரம்' என்ற பாடலைப் போல சிறந்த இசை அமைப்பாளர்கள் மற்றும் கவிஞர்களைக் கொண்டு 'கருத்துப் பாடல்' (THEME SONG) தயாரித்து வானொலி, தொலைக்காட்சி மற்றும் திரையரங்குகளில் ஒலி-ஒளிபரப்புதல்.

21. நெடுஞ்சாலை மற்றும் சாலை வழித்தடங்களிலுள்ள ஊர்ப் பெயர்ப்பலகை மற்றும் வழிகாட்டிகளில் உரிய வாசகங்களை எழுதுதல்.

22. மாவட்டங்களில், தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் சுவரொட்டிகள், கையேடுகள் தயார் செய்தல், சுவர் விளம்பரப் பலகைகள் அமைத்தல், தேசத் தலைவர்களின் பிறந்த நாட்கள், சுதந்திரத் திருநாள், குடியரசுத் திருநாள் ஆகிய நாட்களில் சமபந்தி, மனிதச் சங்கிலி போன்ற நிகழ்ச்சிகளை நடத்துதல், பட்டிமன்றங்கள் நடத்துதல், தெருமுனை நாடகக் குழுவினர் - வில்லுப்பாட்டு - பொம்மலாட்டம் போன்ற மாவட்டங்களிலுள்ள கிராமியக் கலைஞர்களைப் (LOCAL TALENTS) பயன்படுத்தி பிரச்சார நிகழ்ச்சிகளைத் தயாரித்து நடத்துதல் போன்ற பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மேற்கொள்ளுதல். அறிவொளி இயக்கத் தொண்டர்கள் மற்றும் மக்கள் நலப் பணியாளர்களை இவைகளுக்குப் பயன்படுத்திக் கொள்ளுதல்.

23. உள்ளாட்சி அமைப்புகளின் உறுப்பினர்கள் கூட்டம் தொடங்குவதற்கு முன்னர் உறுப்பினர்கள் அனைவரும் தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்க ஏற்பாடு செய்தல்.

24. அரசு சார்பில் நடைபெறும் விழாக்கள், அலுவலர்கள் கூட்டம் மற்றும் மாவட்டங்களில் மக்கள் குறை தீர்க்கும் கூட்டங்களில் பங்குகொள்வோர், தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கச் செய்தல்.

25. பள்ளிகளில் - வாரத்தின் முதல் நாளன்று, மாணவர்கள், தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி ஏற்கச் செய்தல், பள்ளிகளில் தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம், சமூக ஒற்றுமை ஆகிய தலைப்புகளில் பேச்சுப் போட்டி, கட்டுரைப்போட்டி போன்றவைகளை நடத்திப் பரிசுகள் வழங்கி மாணவ-மாணவியரிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.

26. கிராமந்தோறும் ஊராட்சித் தலைவரைத் தலைவராகக் கொண்டு அமைக்கப்படும் அமைதிக் குழுவினரையும் தீண்டாமை ஒழிப்பு குறித்த விளம்பரம் மற்றும் பிரச்சாரப் பணிகளில் முனைப்புடன் ஈடுபடும்படி அறிவுறுத்துதல்.

27. தீண்டாமை ஒழிப்பு, மதநல்லிணக்கம் மற்றும் சமூக ஒற்றுமையை வலியுறுத்தும் வகையில் பல்வேறு சமுதாய மற்றும் சமய மக்கள் ஒரே இடத்தில் ஒற்றுமையாக வாழ வழிசெய்யத் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டுள்ள சமத்துவபுரங்களின் சிறப்பினை விளக்கும் வீடியோ செய்தி-மலர் படங்கள் தயாரிக்கப்பட்டு தொலைக்காட்சிகள் மூலமாகவும் மாவட்டங்களில் செய்தி-மக்கள் தொடர்பு அலுவலகங்களால், வீடியோ வேன்கள் மூலமாகவும் ஒலிபரப்பப்படுதல்.

3. மேற்கூறப்பட்ட நிகழ்ச்சிகளை - சென்னை மற்றும் அனைத்து மாவட்டங்களிலும் நடத்துவதற்கும், இந்த ஏற்பாடுகளுக்குமான செலவினங்களுக்கு ரூ.1.00 கோடி (ரூபாய் ஒரு கோடி மட்டும்) நிதி ஒதுக்கீட்டிற்கு ஒப்பளிப்பு வழங்க அரசு அனுமதித்து ஆணையிட்டுள்ளது. ★

**'தமிழரசில்' வைரக் கற்களாக ஜொலிப்பவை!**

# வாசகர் நெஞ்சம்

'காஞ்சிபுரம் மாவட்டச் சிறப்பிதழ்' மூலம், அரசினுடைய திட்டங்கள் எந்த அளவிற்கு மக்களைச் சென்று அடைந்துள்ளது என்பதை மிகத் தெளிவாக உணர முடிந்தது. எல்லா மாவட்டங்கள் பற்றியும் இப்படி விவர மலர் வெளியாகும் என்று எதிர்பார்க்கிறேன்.

**– கே.பிரஷ்னேவ், பாக்கம் கோட்டூர்.**

வரவர 'தமிழரசு' இதழ் அனைவரும் பத்திரப்படுத்திப் பாதுகாக்க வேண்டிய அளவிற்குப் புதுப்பொலிவு பெற்றுவருகிறது; பாராட்டுகிறேன்.

**– இரா.வீரபாண்டியன், பெரம்பலூர்.**

'காஞ்சிபுரம் மாவட்டச் சிறப்பிதழ்' அந்த மாவட்டத்திற்கே எங்களை அழைத்துப்போய் சுற்றிக்காட்டியது போல் அமைந்திருந்தது.

**– மு.வேதபுரி, கோட்டுப்பாக்கம்.**

'திராவிட நாடு' கிழமை இதழ் பற்றிய போராசிரியர் விவேகானந்தனின் கட்டுரையில் – அறிஞர் அண்ணா அவர்களின் பத்திரிகைப் பணி பற்றிப் படித்துப் படித்து என் உள்ளம் அவர்களின் உழைப்பு வியர்வையில் நனைந்தது. தந்தை பெரியார், அறிஞர் அண்ணா, கலைஞர் போன்றோரின் பொன்மொழிகள் 'தமிழரசில்' வைரக் கற்களாக ஜொலிப்பவைகளாகும்!

**– ஜே.சரவணன், திருப்பத்தூர்.**

கலைஞரின் உரையைத் தமிழரசில் உப்புப்போல் அளவோடு சேர்த்து வருகிறீர்கள்; மனம் மகிழ்கிறோம்; வாடாத வாழ்த்துக்கள்.

**– சி.பி.சிவலிங்கம், கோவை–18.**

காஞ்சிபுரம் சிறப்பிதழில், அறிஞர் அண்ணா, எம்.எல்ஏ.வாக இருந்த காலத்தைப் பற்றி வெளியிடப்பட்டிருந்த கட்டுரை பிரமாதம். பழைய கட்டுரை ஆயினும் புதிய பல செய்திகளை எங்களுக்கு அது தெரிவித்தது.

**– ப.முருகேசபாண்டியன், கரப்பாடி.**

அரசாங்க ஏடானாலும், கதை, கவிதை, மருத்துவத்துளிகள், பொன்மொழிகள், புதிர்–வினாவிடைப் பகுதிகள், பலதரப்பட்ட கட்டுரைகள் போன்ற அரிய செய்திகளை வெளியிட்டுவரும் 'தமிழரசை' வரவேற்கின்றோம்.

**– கோ.நேரு, ஏரவலம்.**

கலைஞரின் கவிதையினை வெளியிட்டு, அறியாமை இருளை விரட்டி ஒளிவிளக்கேற்றி வைத்த தங்களுக்கு நல்வாழ்த்து.

**–அ.பா.ராசன், திருமங்கலம் (மதுரை)**

'சாதி மதங்களைப் பாரோம்' என்கிற மகாகவி பாரதி வாக்கைச் சமத்துவபுரங்கள் அமைப்பதன் மூலம் நிறைவேற்றிவரும் முதலமைச்சர் கலைஞரின் நல்லாட்சியை – அவர் சொற்பொழிவை வெளியிட்டுவரும் தமிழரசை வாழ்த்திப் போற்றி மகிழ்கிறோம்.

**–ப.அருணாசல சண்முகம், வீரளூர்.**

ஆசிரியரும் வெளியிடுபவரும் : க.முத்துசாமி, இ.ஆ.ப., இயக்குநர், செய்தி–மக்கள் தொடர்புத்துறை, தமிழ்நாடு அரசு
சென்னை – தமிழரசு அச்சகத்தில் அச்சிடப்பட்டது.
தமிழரசு அலுவலகம், ஓமந்தூரார் அரசினர் தோட்டம், அண்ணாசாலை, சென்னை–600 002. தொலைபேசி:568926, 568927, 564906



தூய
பட்டு

தூய
சரிகை



ராஜகம்பீரமான ஊதா...
செந்தூரப்பூபோல் சிகப்பு...
மங்களகரமான மஞ்சள்...
வான்வெளிபோல் நீலம்...
கற்பனைக் கடங்கா
அற்புத வண்ணங்களில்
நேர்த்தியான பட்டு,
நல்குவது கோ–ஆப்டெக்ஸ்.

கோ-ஆப்டெக்ஸ்
தமிழ் நாடு கைத்தறி

பதிவு எண். M. 8676
Licence No.TN/MS(C)PP-23

